முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 26—9—69 வெள்ளி | ஒலி: 22



மேல்நாட்டு 'அஞ்ஞானி'கள் சந்திரனுக்கு ராக்கெட் அனுப்புகிறார்கள். அதே நேரத்தில் நம்நாட்டு 'மெஞ்ஞானி'களில் 52 பேர் 'தெய்வீகப் பெண்'ணின் அற்புதங்களைக் காணப் போய் செத்து மடிந்தார்கள், வடநாட்டில்!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

51. பிரிட்டிஷ் பார்லிமெண்ட்

அன்புள்ள மாதவி,

ஆங்கில நாட்டு வரலாற்றில் முதலாம் எலிசபெத்தின் ஆட்சிக் காலம் எப்படி ஒரு பொற்காலமாக விளங்கிற்று என்பதை முன்னரே உனக்கு எழுதியுள்ளேன். எலிசபெத்துக்குப் பிறகு ஆங்கில மகுடம் ஸ்டுவர்ட் வம்சத்தைச் சென்றடைந்தது. ஸ்டுவர்ட் வம்சத்தினர் ஏற்கனவே ஸ்காட்லாந்தின் ஆட்சியுரிமையைப் பெற்றவர்கள். ஆகவே ஸ்டுவர்ட் மன்னனான முதலாம் ஜேம்ஸ் ஆங்கில அரியணை ஏறியபொழுது, ஸ்காட்லாந்தும் இங்கிலாந்தும் ஒரே மன்னனின் ஆட்சியின் கீழ் ஒன்றுபட்டது. இதிலிருந்து பிரிட்டிஷ் தீவுகள் 'கிரேட் பிரிட்டன்' என்ற பெயரைப் பெற்றன. ஸ்டுவர்ட் மன்னனான முதலாம் ஜேம்ஸின் மதக் கோட்பாடுகளில் வெறுப்புக் கொண்ட பிராடஸ்டன்டுகள் 'மே ஃப்லவர்' என்ற கப்பலில் புறப்பட்டுப் புது உலகமான அமெரிக்காவைச் சென்றடைந்து, நியூ இங்கிலாந்து என்ற பெயரில் புதிய காலனியை அங்கே ஸ்தாபித்தனர். 'யாத்ரீகத் தந்தைகள்' என்று அழைக்கப்பட்ட இவர்கள் ஸ்தாபித்த காலனிகள்தான், ஐக்ய அமெரிக்கக் குடியரசின் முதுகெலும்பாக அமைந்தன.

ஜேம்ஸ் மன்னன், தெய்விக உரிமையை நம்பி ஆட்சி செய்தவன். ஓரளவுக்கு அவன் வெற்றிகரமாக ஆட்சி செய்தான்என்றே சொல்ல வேண்டும். ஆனால் அவனுக்குப் பின் இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அவனுடைய மகன் முதலாம் சார்லஸ் சர்வசுதந்திரம் பெற்ற மன்னனாகத் திகழ, செய்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. இங்கிலாந்தின் கடலாதிக்கம் பலம் பெற்று, வாணிபம் வளர்ந்ததால், பலம் பொருந்திய மத்திய வர்க்கம் ஒன்று உருவாகியிருந்தது. மன்னன் போட்ட வரிகளை மௌனமாக ஏற்றுக்கொள்ள இவர்கள் தயாராக இல்லை. இவர்களின் மறுப்பும் கண்டனமும் பார்லிமெண்டின் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. மன்னனும் பார்லிமெண்டும் மனவேறுபாடு கொள்ளும் நிலை பிறந்தது. இதன் விளைவாக மக்கள் குரலுக்குள்ள வலிமையை உலகம் கண்டது. முடியாட்சியின் ஆணைக்கு எல்லை வகுக்கப்பட்டு குடியாட்சி மலர்ந்தது. ஆணை மட்டுமே இட்டுப் பழகிய வேந்தன், ஆணை கேட்டு அதன் வழி நடக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. பார்லிமெண்டரி ஆட்சி முறைக்கு வித்தூன்றப்பட்டது. உலக அரசியல் வாழ்வில் ஆங்கில மக்கள் புதிய சகாப்தத்தை—ஜனநாயக சகாப்தத்தை—ஆரம்பித்து வைத்தனர். ஆகவே, பிரிட்டிஷ் பார்லிமெண்ட் உருவாகி வளர்ந்த கதையை நீ அறிந்து கொள்ளுவது மிகவும் அவசியம்.

பதிமூன்றாம் நாற்றாண்டிலேயே ஆங்கில மக்கள், தங்கள் உரிமைகளுக்குச் சாசனம் தயாரித்து மன்னனை அதில் கையெழுத்திடவும் செய்தனர். அப்பொழுது இங்கிலாந்தையாண்ட ஜான் என்ற மன்னனுக்கும், நிலவுடைமை பெற்ற பிரபுக்களுக்கும் உரிமைத் தகராறு ஏற்படவே, மக்களின் அடிப்படை உரிமைகளை வரையறுத்து ஒரு சாசனம் தயாரித்து அதில் ஜான் மன்னனைக் கட்டாயம் செய்து கையெழுத்துப் போடச் செய்தனர்.

'மாக்னகார்ட்டா' அல்லது மகாசாசனம் என வரலாற்றுப் புகழ்பெற்ற அந்த உரிமைச் சாசனம், மக்களின் இருபெரும் உரிமைகளை ஒப்புக்கொண்டது. ஒன்று, மன்னன் சட்டபடி மக்களின் உணர்ச்சிகளை மதித்து ஆட்சி செய்ய வேண்டும். இரண்டு, மன்னன் ஆட்சி செய்ய வேண்டிய சட்டங்களை மக்களின் பிரதிநிதிகளே கூடி முடிவு செய்ய வேண்டும். இதனால், மன்னன் தான்தோன்றித்தனமாக வரி விதிக்கவோ, சொத்தைப் பறிமுதல் செய்யவோ, விசாரணையின்றி எவரையும் சிறையிலடைக்கவோ முடியாது போயிற்று. மக்களின் அபிலாஷைகளுக்கு மன்னன் மதிப்புத் தர வேண்டியதாயிற்று. 1215-ல் கையெழுத்தான இச் சாசனம், ஆங்கில மக்களின் உரிமைக்கான ஒரு சாசனமாக அமைந்தது!

ஜானுக்குப் பிறகு, மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய பார்லிமெண்ட் ஒன்றுகூடி, மன்னன் எவ்வளவு வரி விதிக்கலாம், எவ்வளவு செலவழிக்கலாம் என்பன போன்ற விஷயங்களையெல்லாம் முடிவு செய்தது. இந்தப் பார்லிமெண்ட் பூரணமான மக்கள் பிரதிநிதித்துவம் பெற்ற பார்லிமெண்டாக இருக்கவில்லை. பிரபுக்களே பெரும்பான்மையாக இருந்தனர். கவுன்டி, பரோக்களிலிருந்து தேர்ந்து அனுப்பப்பட்டவர்களும் செல்வந்தர்களாகவே இருந்தனர். நாளடைவில் பிரபுக்கள் கொண்ட சபை—மக்கள் சபை என இருபிரிவுகள் கொண்ட பார்லிமெண்ட் தோன்றியது. மக்கள் சபை என்ற 'காமென்ஸ்' தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது. பிரபு வம்சத்தைச் சேர்ந்தவர்களும், மதத் தலைவர்களும் மன்னனால் நியமிக்கப்பட்டவர்களும் பிரபுக்கள் சபையில் அங்கம் வகித்தனர்.

வர்த்தகம் பெருகப் பெருக பிரிட்டன் செல்வம் கொழிக்கும் நாடாயிற்று. மன்னனுக்குப் பொருள் வேண்டியபோதெல்லாம் அவனுடைய மந்திரி மக்கள் சபையிடம் சென்று அதற்கான அனுமதியை வேண்டிப் பெற்று வருவது வழக்கமாயிற்று. இந்த நிலையில்தான் அதிகார மமதை பெற்ற முதலாம் சார்லஸ் மன்னன், பார்லிமெண்டை அலட்சியப்படுத்தித் தன் இச்சைகளை நிறைவேற்ற முயன்றான். 1628-ல் மக்கள் தங்கள் உரிமைகளை வற்புறுத்தி 'உரிமை மனு' ஒன்றை மன்னனிடம் சமர்ப்பித்தனர். சார்லஸ் மன்னன் அதை அலட்சியப்படுத்தினான். உரிமை பற்றிப் பேசிய பார்லிமெண்ட் உறுப்பினர்களைக் கைது செய்யப் போர்வீரர்களை அனுப்பிவைத்தான். பயந்த உறுப்பினர்கள் ஓட்டம் பிடித்தனர். அதோடு பார்லிமெண்டைக் கலைத்துவிட்டதாக முதலாம் சார்லஸ் பிரகடனப்படுத்தினான்.

பார்லிமெண்ட் தரப்பினரும் சும்மா இருக்கவில்லை. படையொன்று திரட்டினர். மன்னனும் பெரும்பாலான பிரபுக்களும் ஒரு கட்சியாயினர். சிறுபான்மைப் பிரபுக்களும் மக்களும் மற்றொரு கட்சியாயினர். நாட்டின் தலைநகரான லண்டன் மன்னனின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் புரட்சிக் கொடி உயர்த்திற்று. ஏழாண்டுகள் உள்நாட்டுப் போர் நடைபெற்றது. முடிவில் ஆலிவர் கிராம்வெல் என்ற திறம்படைத்த தளபதி பார்லிமெண்ட் கட்சிக்கு வெற்றி தேடித்தந்தான். முதலாம் சார்லஸ் தோற்றுக் கைது செய்யப்பட்டான். பிரபுக்கள் கூடி மன்னனுக்குக் கருணை வேண்டினர். ஆனால், கிராம்வெல்லின் தலைமையில் கூடிய மக்கள் மன்றம் மன்னனைக் கொடுங்கோலன் என—நாட்டுத் துரோகியெனக் குற்றம் சாட்டி மரண தண்டனை விதித்தது.

இராஜ விசுவாசம் கொண்ட பிரிட்டிஷ் பிரஜைகள், மன்னனுக்கு மரண தண்டனை விதித்து பகிரங்கமாக அந்தத் தண்டனையை நிறைவேற்றிய செயல், பிரிட்டிஷ் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்! இது நடந்தது 1649-ல்! இச்செய்தி கேட்டு ஐரோப்பிய மன்னர்கள் அஞ்சி நடுங்கினர். ஆங்கில மக்கள் காட்டிய வழியில் தம் நாட்டு மக்களும் நடக்க ஆரம்பித்து விட்டால்....? பீதி அவர்களைப் பிடித்தது. டச்சுக் கப்பல் படையும், பிரஞ்சு கப்பல் படையும் இங்கிலாந்தை முற்றுகையிட்டன. மன்னனின் வீழ்ச்சிக்குப்பிறகு பிரிட்டன் பலஹீனமாகி விடவில்லை. ஆலிவர் கிராம்வெல்லின் தலைமையில் பலமுள்ள சர்க்கார் பிரிட்டனை நிர்வாகம் செய்தது. ஆகவே, வெளிநாட்டுக் கப்பல் படைகள் விரட்டியடிக்கப்பட்டன. பிரிட்டனின் கடற்பலம் மீண்டும் உணர்த்தப்பட்டது.

இதுவரையில் முடியாட்சியின் கீழிருந்த இங்கிலாந்து அடுத்த

[தொடர்ச்சி பக்கம்—10]

எங்கே உங்களுடைய காந்தீய பக்தி?

★

'தமிழர் வாழவேண்டும்!'

'சிச்சி! இந்தக் குறுகிய புத்தி கூடாது!'

'தென்னகம் தழைக்க வேண்டும்!'

'பேத உணர்ச்சி ஆகுமா? பரந்த மனோபாவம் வேண்டுமப்பா!'

'வடநாடு வாழ்வதோ? தென்னாடு தாழ்வதோ?'

'வடக்கு—தெற்கு — எனும் இழி நினைப்பை அகற்றி விடு! எல்லோரும் பாரத புத்திரர்!'

'வடக்கே ஆதிக்கம், தொழில் வளர்ச்சியோ?'

'பொறாமை கூடாது! அந்த ஆமை புகுந்த நம் வீடு உருப்படாது!'

—இப்படிக் கொதிக்கின்ற நெஞ்சுக்குக் குளிர் மிகுந்த உபதேசம் அடிக்கடி வடநாட்டிலிருந்து வருவதைக்காணலாம்!

பெயர் தெரியாத வடநாட்டுக் காங்கிரஸ்காரனிலிருந்து, பாரத தேசிய காங்கிரஸ் தலைவர் வரை தென்னகம் பற்றிய உரிமைக் குரலெழுப்புவோருக்கு இப்படித்தான் பதிலளிப்பர்.

குறுகிய மனோபாவம் நமக்கா—அவர்களுக்கா என்பதைக் கீழ்க்காணும் செய்தி கூறுகிறது.

'தென்னாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகமாகிவிட்டதே!'

'ஐயோ! இனி அவர்கள் வடநாட்டிற்குப் பணம் செலுத்தி சர்க்கரை பெறமாட்டார்களே!'

'இது ஆபத்தான நிலை; தென்னாடு சர்க்கரைத் தொழிலில் தன்னிறைவு பெற்றுவிட்டால் நமக்குச் சந்தை எங்கே?'

'இது தகாது! தென்னாடு சர்க்கரையை அதிகமாக உற்பத்தி செய்யவிடக் கூடாது!'

— கூறுவது சாதாரண மனிதர்களல்ல! உத்திரப்பிரதேசம், பிகார் ஆகிய மாநிலங்களின் காங்கிரஸ் முதலமைச்சர்கள்!

ஆம்; டாக்டர் சம்பூர்ணானந்தாவும், கிருஷ்ண சின்ஹாவும் தான இந்த ஏகாதிபத்யக் குரலை—தெற்கு வாழக்கூடாது என்ற குறுகிய புத்தியின் அடிப்படையில் பிறந்த கூக்குரலை எழுப்புகின்றனர்!

ஏ, பாரத புத்திரர்களே!—எங்கே உங்கள் பரந்த நோக்கம்?

ஏ, அகில இந்தியாக்களே!—எங்கே உங்கள் 'அகன்ற புத்தி?'

ஏ, காந்திய பக்தர்களே!—எங்கே உங்கள் 'சுயதேவைப் பூர்த்தித் திட்டம்'?

வெள்ளி 25—9—59 சென்னை

நாடு நமதாகும் நாள்!

இருவண்ணக் கொடியேற்றி, நாட்டின் இன முழக்கத்தைக் காட்சியாக்கிக் காட்டினர்!

வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீதி முனையெல்லாம் கூடி நின்று, அள்ளக் குறையா அழகுமிழும் கருத்துக்களைச் செவி மடுத்தனர்!

'இப்படை தோற்கின் எப்படைதான் ஜெயிக்கும்' என்ற வினுக் குறி விண்ணெலாம் தோகையற்றுக் கிளம்ப, பகை வெட்டிச் சாய்க்கும் சூளுரைத்துச் சுற்றினர், நகரெங்கும் ஊர்வலமாய்!

கலை நிகழ்ச்சி காட்டினர்; விலையில்லா கொள்கைகளை வித்தாக்கிக் கூத்துகள் நடத்தினர்; 'தலை கொடுத்தும் தாயகத்தை மீட்போம்' என்று, வஞ்சக வலை விரித்து நிற்போருக்கு எச்சரிக்கை செய்தனர்!

செருக்கில்லாத பேச்சு—கேட்பவர் சிந்தைதனை ஊடுருவும் சிறப்பான வாதம் —'இந்தச் சிங்கங்கள் எடுத்திட்ட முயற்சி வாழ்க; வெல்க' என்ற நல்லிதயம் படைத்தோரின் வாழ்த்து —

இந்தக் கோலாகல நிகழ்ச்சிகள் சென்ற வாரம் முழுதும் தென்னகத்திலே காணப்பட்டன, இயக்கத்தின் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இட்ட ஆணையின் காரணமாக!

அன்றொரு நாள் ஆரியப்படை கடந்தான் நெடுஞ்செழியன் என நாவினிக்கப் பேசுகின்றோம் — காதினிக்கக் கேட்கின்றோம் — விழியினிக்கப் படிக்கின்றோம் வீர வரலாற்றை! அந்த வரலாறு புதிய உருப்பெற்று இதோ திராவிடத்திலே நடமாடுகிறது நாவலர் உருவிலே!

அவரது தலைமையிலே ஆரியப்படை மட்டுமல்ல; அருமைத் திராவிடத்தை அடிமையாக்கும் தடையனைத்தும் கடக்கத் தீர்மானித்து விட்டோம். திருக்குறள் இலக்கணம் தீட்டிக் காட்டும் தீந்தமிழ்த் தலைவன் அவன் எனத் திராவிடம் தேன் சிந்திப் பேசுகிறது. நான் முந்தி; நீ முந்தி என அந்த நாவலரின் படையிலே வீரர்கள் குவிகின்றனர்.

"இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்து அதனை அவன் கண் விடல்" என்ற குறள் மொழிப்படி கழகத்திற்குத் தலைவரான காளை! கட்டழகன்! மோட்டவிழாப் பருவத்திலேயே மூச்செல்லாம் தமிழுக்கு—தமிழ் வாழும் மண்ணுக்கு என முழங்கிய சேரன்! பெருவீரன்! சொலல் வல்லன்! சோர்விலான்! அஞ்சான்! அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது எனப் புகழ்பெற்ற அரிமா நெஞ்சன்! தன் சொல்லை வெல்லுஞ்சொல் பிறிதோர் சொல் இல்லையெனச் சொல்லாற்றும் சோழர் குடிப் பிறந்தான்! தமிழ் வளர்ப்பதில் பாண்டியன்! தருக்கர் முடி நெறிப்பதில் இலங்கை வேந்தன்! இத்தகையோன் இத்தரையின் மீட்புக்குத் தலைவனாகி நிற்கின்றான். நிமிர்ந்து நோக்கும் இடமெல்லாம் 'நான் நெடுஞ்செழியன் படை வீரன்' என மார்தட்டும் மறவர்களைக் காண்கின்றான். அன்னோன் பொன்னான தமிழ் பேசி—கண்ணாம் நம் தாயகத்தை விடுவிக்க வழியுரைக்கிறான். மொழிதனிலே இனிமை கண்டோம் என்ற புகழ் உரைக்கும் போதையிலே கிடக்காமல் புதிய பாதை கண்டோம்—போர் புரியும் முறையும் கண்டோம்—என தோள் தட்டி ஆடுகின்ற தோழர்கள் எல்லாம்—தோகை மயிலாட்டம் பின்னர்—நிலவு பின்னர்—தென்றல் பின்னர்—தென்னக விடுதலையே முன்னர் எனக் கரந்தூக்கிக் களம் நோக்கி எழுகின்ற காட்சிதனைக் கண்டுவிட்ட காரணத்தால், கட்டளையிட்டார் அவர், நாம் பிறந்த நாளை—கொட்டும் மழைக்கும் போட்டியாக கண்ணீர் விட்டுக்கொண்டு தலைநகரின் கல்லறை மைதானத்தில் நாம் பிரிந்தோமே; பிறந்தோமே பத்து ஆண்டுகளுக்கு முன்பு; அந்த நினைவு நாளைக் கொண்டாட வேண்டுமென்று!

அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த கடமைவாதிகள் சென்ற வாரத்தையே விடுதலை வாரமாக்கி, நம் விடுதலை வேட்கையை நாட்டுக்கு எடுத்துரைத்தார்கள்!

ஆமாம்; அந்த நாள்—செப்டம்பர் 17—நம் கழகம் பிறந்த நாள்!

"கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது...." என அறிவுரை வழங்கி வீரர்களை அணி வகுத்து நிறுத்தி — பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும் இருள் தீர எண்ணிச் செயல் புரியும் ஒளி விளக்காம் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் சிரித்த முகத்தை—செந்தமிழ்ப் பெருக்கை — "செரு முனைக்குச் செல்வோம் வாடா தம்பி!" என அழைக்கும் விதத்தை நேரிலே கண்டு—திராவிடத்தேரில் இவரன்றோ நல்ல சாரதி எனக் கொண்டு பணியாற்ற 'படைபலம் பக்க பலம் மிக்கவர் எமது அண்ணா பாரீர்' என்று பாருக்கும் பாராள்வோருக்கும் உணர்த்திட்ட நாள்!

அண்ணா என்றோர் தலைவராம்; ஆள் பெரிய குள்ளராம்!— என் போருக்கு "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்; உருள் பெருந் தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து!" என்ற குறளைச் சொல்வார். தி. மு. கழகமெனும் தேருக்கு அச்சாணி — கட்டாணி முத்தனைய எங்கள் தமிழ் காத்திடும் காவலன்—பட்டாளத் தம்பிகளின் பாசமிக்க அண்ணன்! குடும்பத்தில் எத்தனைபேர்? தாயுண்டா உயிரோடு? தந்தையிருக்கிறாரா? சகோதரர் எத்தனை? எனக் கேட்கும் நண்பரிடம் கூடப்பிறந்தவர் யாருமில்லை; ஆனாலும் கூடப்பிறந்தவர் கூடக் காட்டாத அன்பைக் காட்டும் என் அண்ணன் காஞ்சிபுரத்தார் இருக்கின்றார்; அவர் இருக்க எனக்கேன் கவலை? தானுடாவிடினும் தசையாடும் உறவு பெற்ற உடன் பிறப்பு அவர்! அந்த வணங்காமுடி மன்னவனின் வாழ்த்துண்டு நமக்கெல்லாம்! அவர் தரும் பயிற்சி பல உண்டு! பாலுண்டு தேனுண்டு தானுண்டு தன் வீடுண்டு எனப் படுத்திருக்கும் தமிழனையும் தட்டி எழுப்புகின்ற திறன் அவருக்குண்டு! 'பூவார் சோலைப் புது மயிலே! கூவார் எந்தன் கோகிலமே!' எனக் கொஞ்சி காதல் மிஞ்சி வாடும் பருவத்தினர்கூட 'போடா தம்பி போருக்கு' என அவர் கூறிவிட்டால் போதும்; ஓடிவருவார் களத்திற்கு! அப்படிக் கட்டளையிடும் நிலையிலேயுள்ள தலைவர்! கழகத்திற்குக் கிடைத்த புதையல்! தேடக் கிடைக்காத திராவிடத்தின் சொத்து! நாவலர் போற்றும் நமது காவலர்! லட்சோப லட்சம் தம்பிமார்களின் இதய வீடுகளில் ஏக காலத்தில் குடியேறியிருக்கும் எங்கள் தமையன்! அவர் அழைக்கிறார்; விடுதலை சேனைக்கு வாரீர் வாரீர் என்று! அறிவு மணம் பெற்றிட! பெற்ற மணம் பிறந்த நாட்டுக்குப் பயன் தந்திட!

அந்தப் பெருஞ் சேனையிலே தம் பெயரையும் பூரிப்புடன் பொறித்துக் கொண்ட தீரர்கள்—மனந்தளரா மாவீரர்கள் கொண்டாடிய விடுதலை வாரம் மக்களிடம் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்ியது; நமையாளும் மதோன் மத்தர்களுக்குப் புதிய பீதியைத் தோற்றுவித்தது!

பத்து ஆண்டுகள் பூர்த்தியடைந்த திருநாளைக் கொண்டாடினோம் இப்போது; நாடு விடுதலை பெறும் நல்ல நாளைக் கொண்டாடும் நேரம் எப்போது?

விரைவில்.... விரைவில்....! நாடு நமதாகும் நாள் விரைந்துதான் வருகிறது நம்மை நோக்கி!

ஃ

நாமக்கல் கவிஞர் வாழ்த்துகிறார்!

★

அன்புமிக்க திரு. கருணாநிதி அவர்களுக்கு, வணக்கம். திரு. அண்ணாத்துரையவர்களை வாழ்த்திக் கீழே உள்ள பாடல் அனுப்பியிருக்கிறேன். ஏற்றருளுங்கள். வாழ்க நலம்.

அன்புள்ள,
வெ. இராமலிங்கன்.

பாடல்

'வான்புகழும் திருக்குறளை உலகுக்கீந்து
வகைமலிந்த கலைபலவும் வளர்த்த தாயாம்
தேன்வடியும் தமிழ்மொழியின் திறத்தைப் போற்றித்
தென்னகத்தின் பழஞ்சிறப்பை மீட்போம்' என்று
ஊன் உருக உளம் உருக உணர்ச்சிபொங்கி
ஊக்கமதைத் தூக்கிவிடும் உரைகளாற்றித்
தான்பிறந்த தமிழ்நாட்டின் மேன்மைக்காகத்
தவிக்கும் அண்ணாத் துரையவர்கள் தழைத்து வாழ்க.

சொல் வலை வேட்டுவர்

சிறுவை ந. இனியன்

"மாஞ்சம் உமக்கே
இடமாக வைத்தேன்
நினையாது ஒரு
போதும் இருந்தறியேன்"

—என்னும் நிலையில் அறிஞர் அண்ணாவை திருவிடத்தின் மக்கள் அனைவரும் தம் மனத்தகத்தே இருத்தி வைத்து வழிபட்டுவர, 'சிறுமதியாளனே வேட்டுவன் என்றா கூறுகிறாய் எமது அண்ணாவை?—என்று கேட்டுவிடாதீர்கள். சொல்வலை வேட்டுவர்கள் தமிழ் இலக்கியத்தில் ஒரு சிலரைத்தான் காண முடிகிறது. இந்த அழகிய தலைப்பை எனக்குத் தந்தவர் "பரிப்பெருமாள்" என்பவர். இவர் திருக்குறளின் பத்து பழைய உரையாசிரியர்களில் ஒருவர். அண்ணாவைப் பற்றி நினைக்கவே, அவரது நாவன்மையைப் பற்றி நினைத்தேன். உடனே அண்ணாவைப் பற்றி வள்ளுவர் ஏதாவது கூறி இருக்கிறாரா? என்று பார்த்தபோது,

"நாநலம் என்னும்
நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம்
அன்று"

—என்றார் வள்ளுவர். இதற்கு உரைகூற வந்த "பரிப்பெருமாள்" என்பவர், "இஃது, எல்லா அழகிலும் மிகுந்த அழகு என்றமையான் இன்பமும் பயக்கும் என்றது; சொல்வலை வேட்டுவன் என்றாரும் உளர்" என்கிறார். உடலின் ஐந்து புலன்களிலே நாப்புலன் பெருமை மிக உயர்ந்தது என்பது பொய்யில் புலவர் கண்ட உண்மை. இம்முதற் குறளுக்கு ஒப்புவமையாக சிறுநூல் ஒன்றிலிருந்து ஒரு உவமை காட்டப்படுகிறது.

"மயிர்வனப்பும் கண்கவரும்
மார்பின் வனப்பும்
உயிர்வனப்பும் காதின்
வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும்
வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே
வனப்பு"

—என்பதாம் அப்பாடல். இச்சொல்லை வேட்டுவர் பெருமையை இரண்டு இடங்களில் காண்போம். அவ்விரண்டும் இலக்கியப் பெருமையோடு வரலாற்றுப் பெருமையும் அடைந்துவிட்டது. ஒன்று 9—2—1943-ல் சென்னை சட்டக் கல்லூரியில் திரு. சி. எம். இராமச்சந்திரன் (செட்டியார்), பி. ஏ., பி. எல்., டிப். இன். ஜியாக். அவர்கள் தலைமையில் சொல்லின் செல்வர். பேராசிரியர். ரா. பி. சேதுப் (பிள்ளை) அவர்கட்கும் நமது அறிஞர் அண்ணாவுக்கும் நிகழ்ந்த சொற்போர். மற்றொன்று 14—3—1943-ல் சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்க பள்ளியில், சேலம் கல்லூரித் தலைமைப் பேராசிரியர் ஏ. இராமசாமி அவர்கள் தலைமையில், நாவலர் எஸ், எஸ். பாரதியாருக்கும் அறிஞர் அண்ணாவுக்கும் நடந்த சொற்போர் ஆகும். இந்த இரண்டு சொற்போரிலும் சொல்வலை வேட்டுவர் அறிஞர் அண்ணா பாராட்டப்பட்டார்.

அதாவது வேட்டுவர் அண்ணா வீசிய சொல்வலையினின்றும தப்பமுடியவில்லை என்பதே. இதனையே மேலும் வள்ளுவப் பெருந்தகை,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்
சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை
அறிந்து"

என்றார். உரை கூறிய பெரியார் "பரிதியார்", 'களறியிலே வார்த்தை சொல்லுவானாகில் தான் சொல்லுகிற சொல்லை வேறே ஒருவன் சொல் வெல்லாமல் சொல்லுவான்' என்கிறார். இத்தகு பாடல்களை அண்ணாவின் சொல்லாற்றலோடு ஒப்பு நோக்கி மகிழ்வோமாயின் நலம் பெறுவோம்.

இத்தகைய சொல்லாற்றல் படைத்த அண்ணாவின் உவமைகளை நோக்கும்போது அவர்கள் சங்க இலக்கியங்களையும், பிற்கால புராணங்களையும், காவியங்களையும் சிறுநூற்றிரட்டுகளையும் சங்கையறக் கற்றுள்ளார் என்பது பெறப்படுகிறது. இத்துணை நுண் அறிவுக்கு அமைந்த பெற்றியைக் குறித்து மயங்காமல் இருக்க இயலாது. அங்ஙனம் மயங்கும்போது,

"தாய்வயிற்றிருந்தே தாயம்
எய்தினன்',

என்று கரிகாலனை முடத்தாமக் கண்ணியார் மொழிதலை நினைந்து அமைதி உறுவதாய் உள்ளது. அவ்வளவு திட்பமான நூலறிவும், அதனை விரித்துச் சொலல் வல்ல சொல்லாற்றலும் அமைந்து இருப்பதால் தான் இன்று எல்லோர்க்கும் அண்ணாவாய் விளங்குகிறார்.

திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் 1949—ல், "...எனது அருமைத் தோழர் அண்ணாதுரை இதுகாறும் பேசினார். யான் பல நாட்களாகக் கேளாத திண்ணிய உரையைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றேன்......திராவிட நாடு ஐக்கிய நாடாகி, அந்த திராவிட நாட்டிலே திராவிடத் தளபதி அண்ணாதுரை அவர்கள் தமிழ்க் கொடி ஏந்தி, அந்தக் கொடியின்பின் தமிழ் வீரர்கள் ராணுவ நடை போட்டுச் செல்லும் நாளைக் காண்பேனேயானால் அதுவே யான் பெற்ற பேறு" என்றுகூறி பூரிப்பு அடைந்தார்.

உயர்திரு. நாவலர் எஸ். எஸ். பாரதியார், "அவருடைய நாவில் சொற்கள் எப்போது உதிப்போம் என்று காத்துக் கொண்டிருக்கின்றனவே யன்றி அவர் சொற்களுக்காகக் காத்திருப்பதில்லை" என்று களிப்பைத் தெரிவித்தார்.

இந்த இருபெருமக்களும் உளமாறப் புகழ்ந்த நல்லுரையால் நமது அண்ணா சொல்வலை வேட்டுவர் எனக் கூறின் மிகையாகாது. மற்றும் அண்ணாவின் சொல்வன்மைக்கு மற்றொரு சான்று. 1937-ல் ஒய். எம். சி. ஏ. அத்தீனியக் மண்டபக் கூட்டம் ஒன்றில் உயர்திரு. ராஜாஜி நடுவராக இருந்து திரு. ஏ. எல். பாண்டியா அவர்கள் "பண்டித் பரீட்சத்" என்ற பிரேரபனையைப் பற்றிப் பேச, அதனை எதிர்த்து அண்ணா ஐந்து நிமிடம் பேச அனுமதி பெற்று 45 நிமிடம் பேசி, கூடி இருந்த மக்கள் அனைவரையும் தம் பக்கம் ஈர்த்தார். ராஜாஜி உளமாறப் பாராட்டினார்.

மேலும் 1934—35 ஆம் ஆண்டுகளில் "ஜார்ஜ் டவுன் அத்தலட்டிக் அசோசியேஷன்" என்ற நிறுவனத்தில் உலகம் புகழ் ஆங்கில மொழிப் பெரு நாவலர் சர். ஏ. இராமசாமி அவர்கள் தலைமையில் அண்ணா அவர்கள் "ஆட்டங்களைப் பற்றியும் விளையாட்டுக்களைப்" பற்றியும் பேசிய போது திரு. சர். ஏ. இராமசாமி அவர்கள் அண்ணா பேசியதைக் குறித்து, "என்னையும் என் கொள்கையையும் அதிகமாகப் பின்பற்றி இருக்கிறார், நான் அதிகம் பேச முடியாது போல் இருக்கிறது" என்றார். இதிலிருந்து அண்ணா பேசிய பிறகு நான் பேச என்ன இருக்கிறது என்பதுதான் பொருள். அது இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

இத்தகு சான்றுகள் காட்டி அண்ணா சொல்வலை வேட்டுவர் என்று கூறுவது மிகையன்று. ஆகவே அருமை அண்ணாவின் பொன் விழா வருகிறது எனின் பூரிப்பு அடையாதார் யார்? என்றும் உளதென் தமிழ் போல், அதன் இனிமை போல், அதன் எளிமைபோல், அதன் செறிந்த வண்மைபோல் அவர் தொண்டு இத்திருவிடத்தில் நீடு வளர வேண்டும். அவரை வாழ்க வாழ்க என வாழ்த்தும் முகத்தான், சிறியேனாகிய யான் வாழ்த்தாது — புறநானூற்றில் நன்மாறனை புலவர் மருதன் இளநாகனார் வாழ்த்தும் வாழ்த்தினையே ஈங்கு கூறி அமைவின் சால்புடைத்தாகும்.

"..........................

அறநெறி முதற்றே யரசின்
கொற்றம்
அதனால், தமரெனக் கோல்
கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற
லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ்
சாயலும்
வானத் தன்ன வண்மையு
மூன்றும்
உடையை யாகி யில்லோர்
கையற
நீடு வாழிய நெடுந்தகை
தாழ்நீர்
வெண்டலைப் புணரி
யலைக்குஞ் செந்தில்
நெடுவே ணிலைஇய
காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணவிழும்
பலவே"—புறம். 55.

இப்பாடலை நீடு நினைந்து—அண்ணாவின் அருமைப் பண்புகளையும் ஒப்புவமையாக நோக்கி இன்புற்று, மேலும்

"புகழ்பாடுவோர்
பொலிவுதோன்ற
இன்று கண்டாங்குக்
காண்குவ மென்றும்
இன்சொலென் பதத்தை
யாகுமதி பெரும"
—புறம். 40.

என்றவாறு, "யாங்கள் நின்னை இகழப்படுவோர் எருத்த மடங்கப் புகழ்பாடுவோர் பொலிவு தோன்ற யாம் இன்று கண்டாற் போல எந்நாளும் இனிய மொழியோடு காண்டுவோம்" எனவும் நினைந்து சொல்வலை வேட்டுவர் அண்ணா, திரை அலைக்கும் துறைக்கண் அமைந்த மணலிலும் பலகாலம் நீடு வாழிய என வாழ்த்துவோம்.

"தாய்நாடு"
ஒரு வேண்டுகோள்

★

"எனக்கு ஏற்பட்டுள்ள தவிர்க்க முடியாத சில முக்கிய அலுவல்கள் காரணமாக, செப்டம்பர் 17-ந் தேதி தொடங்கப்பட இருந்த வார இதழ், "தாய்நாடு" டிசம்பர் மாதத்திலிருந்து வெளிவரும் நிலை ஏற்பட்டுள்ளது. தயைகூர்ந்து இந்தக் காலதாமதத்துக்கு மன்னிக்குமாறு வேண்டுகிறேன்."

—என்று தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் அறிவிக்கிறார்.

செழியன் - பிரேமா

அண்மையில் அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற திருமண விழாவில் மணமக்களான இரா. செழியன் எம். ஏ. அவர்களும், பிரேமா எம். பி. பி. எஸ். அவர்களும்!

பொல்லாத வெற்றி பெற்றுர் பொல்லாத வழிகளில் அங்கே!

புதுவை வெற்றி பற்றி இன்னும் பேசிக் கொண்டிருக்கிருர்கள், காங்கிரசார்! தாங்கள் பெரும்பான்மை இடம் பெற்றது கூட அவர்களுக்குப்புளகாங்கிதம் தரவில்லை. தி. மு. க-வினர் கட்சி ரீதியாக ஒரு இடம் கூடப் பெற முடியவில்லையே!—என்று கூவிக் கூவித்தான் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொள்கின்றனர்.

அரசியல் இருட்டுக் காலம்—அழிவுக் காலம் தி. மு. க—விற்கு வந்துவிட்டதெனக் கூறி, தமக்குத் தாமே கைதட்டு வாங்கிக் கொள்வதில் அமைச்சர்கள்கூட ஈடுபட்டிருக்கிருர்கள். அமைச்சர்களுக்கு அந்த வெற்றி அதாவது எதிர்க்கட்சியின் தோல்வி எப்படி விளைந்திருக்கும் என்பது தெரியாததல்ல.

* அளவுக்கதிமான வாக்குறுதிகள்.

* அள்ளி அள்ளித் தர வெள்ளிப் பணம்.

* அக்ரமச் செயல்கள்.

—இந்த அடிப்படைக் குழிகளிலிருந்துதான் அவர்களின் வெற்றி மாளிகை அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி நாம குற்றம் சாட்டும்போது அவர்களின் வாய் இதழ்கள் ஒன்று சேருகின்றன. மௌனிகளாகின்றனர்!

அந்த மௌனிகளை மேலும் மௌனியாக்கிட ஒரு செய்தி வந்திருக்கிறது. அது ஒரு தொகுதி அபேட்சகர் தரும் திடுக்கிடும் செய்தி!

புதுவையில் மண்ணுடிப்பட்டு ஒரு தொகுதி.

10—8—59—இரவு 10 மணி!

அங்கு அமைதி தவழ்ந்திருந்தது!

காங்கிரசார் வந்தனர்! அமைதி குலைந்தது. சூறைக் காற்று எழுந்தது!

1. மண்ணுடிப்பட்டின் குறிப்பிடத் தக்க 15 கிராமங்களிலும் உள்ள மக்கள், செல்வாக்குப் பெற்றவர்கள், போலீசாரால் வலிந்து அழைத்து வரப்பட்டனர்.

2. காங்கிரஸ் அபேட்சகருக்கு (குபேருக்குச்) சீட்டுப் போட வேண்டும் என்று பயமுறுத்தப்பட்டார்கள்.

3. தம் கருத்துக்குக் கட்டுப்பட்டவர்களோ இல்லையோ என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் காரில் எங்கோ தூக்கிச் செல்லப்பட்டார்கள்.

4. சிலர் போலீசின் எதிரிலேயே அடிக்கப்பட்டார்கள். மண்டையுடைக்கப்பட்டார்கள்.

5. மேற்சொன்ன அக்ரமக்காரர்களின் கையில் அகப்பட்ட தலைவர்களைக் கொண்டு விரைவாகவும் பரவலாகவும் எங்கும் போய்க் குபேருக்குத்தான் சீட்டுப் போட வேண்டுமென்று கட்டுப்படுத்த வைத்தார்கள் — அடிக்க வைத்தார்கள்.

6. இதற்காகப் பணம் ஏராளமாகப் பரவலாக அள்ளி வீசப்பட்டது.

ஆம்; காங்கிரஸ் வெற்றியின் ரகசியம் இதோ!

'கள்ளுக் கடையை மூட மாட்டோம், காந்தியம் செத்தாலும் பரவாயில்லை' — என்று கூறியதோடு மட்டுமல்ல; ஜனநாயகத்தின் கழுத்திலே வித விதமான கூர் வாளைச் செலுத்த—வேலைச் செருகத் தயங்க மாட்டார்கள் என்பதை மேற்கண்ட அக்ரமச் செயல்கள் நிரூபிக்கின்றன.

1. பலாத்காரமாக கிராமத் தலைவர்களை வரவழைத்து,

2. அவர்களைப் பயமுறுத்தி,

3. கருத்தில் மாறுபட்டவர்களைச் 'சிறை எடுத்து'ச் சென்று,

4. போலீசின் எதிரிலேயே பொல்லாங்குச் செயல் புரிந்து,

5. அடிதடியிலேயே ஓட்டுப் பெற்று,

6. ஆயிரக் கணக்கில் அந்த அக்ரமச் செயல்களுக்குச் செலவழித்துத்தான் இந்தப் பொல்லாத வெற்றியைப் புதுச்சேரியிலே பெற்ருர்கள். அந்தப் போலி வெற்றியைக் காட்டி வெளி மாநிலங்களில் 'தேர்தல் ஹோலிப் பண்டிகை' கொண்டாடுகிருர்கள்!

—இதை, நாம் சொல்லவில்லை! புதுச்சேரியின் முன்னுள் சட்டமன்ற உறுப்பினரும், புரட்சிக் கவிஞருமாகிய பாரதிதாசன் அறிக்கையொன்றில் கூறுகிருர்.

இந்த அக்ரமச் செயல்களை எடுத்துச் சொல்ல புதுச்சேரிக்குச் சென்ற பழநி என்பவர் இன்னும் திரும்பவில்லை! அக்ரமக்காரர்களால் அவருக்கு என்ன நேர்ந்ததோ?—என்று திடுக்கிடும் செய்தியையும் கூறுகிருர் கவிஞர்.

பாவம், தேர்தலில் தோற்றுப் போனதால் இத்துறையில் இறங்கிவிட்டார் கவிஞர்! — என்று நாம் கூறமுடியாது! அவர் கூறியதனைத்துக்கும் ஆதாரம் வைத்திருக்கிருர். அறிக்கை அனுப்பியிருக்கிருர் மேலிடத்திற்கு!

அந்த அறிக்கையைப் பெற்றுகொண்ட புதுவை அரசு, உடனே நீதியின் பக்கம் சாய்ந்து அநீதியை—அக்ரமத்தைக் கூண்டிலேற்றிவிடும்—எனக் கூறமுடியாது!

ஆனால் நமக்குத் தெரிகிறது, 'கதர்ச் சட்டைகள்' பெற்ற வெற்றி, ஜனநாயகம் கொலையுண்டு கதறிய பிறகு பெற்ற வெற்றி தானென்று!

இப்படிப் 'பொல்லாத' வெற்றியைப் பெற்ற அவர்கள் கூடாரத்திலே அமைதி பொங்கிற்று—என்ருல் அதுவுமில்லை. அமைதி தவளவில்லை; அமளி எழுந்தது! கோட்டைக்குள்ளே குத்து வெட்டுத் துவங்கியது.

'கோஷ்டிச் சண்டை' துவங்கியது! யார் முதன் மந்திரியாய் வருவதென்ற சண்டை! காங்கிரசைக் காட்டி, காந்தி படத்தைக் காட்டி வெற்றி பெற்ற அத்தனை காங்கிரஸ்காரர்களும் — அதாவது 21 காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும் முதன் மந்திரியாய் வர உள்ளூர ஆசைப்பட்டார்கள். புகை கிளம்பியது! போராட்டம் துவங்கியது!

டார்வின் தத்துவப்படி வலிமையாளர்கள் வெற்றி பெற்ருர்கள்!—அதாவது—பண வலிமை பெற்றவர்கள் வெற்றி பெற்ருர்கள்!

அப்படி வெற்றி பெற்ற திருவுருவங்கள் எவ்வளவு தெரியுமா? பதிமூன்று பேர்! பதின்மூன்று பேரும் அமைச்சர்கள் ஆகிவிட வேண்டும், அந்தச் சின்னஞ்சிறு புதுச்சேரிக்கு—என்ற தணியாத ஆசையை உள்ளடக்கிக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தார்கள்.

காமராசரைக் கண்டார்கள்! 'குபேருக்குப் பதவி கொடுக்காதீர்கள். ஒற்றுமையாய் இருங்கள்' — என்று உபதேசித்தார், சென்னை 'உற்சவ விக்ரக'மான முதல் அமைச்சர்!

இதுவே தேவ வாக்கு—வேத வாக்கு—எனக் கொண்டு புதுச்சேரி திரும்பினார்! அய்யோ பாவம், சென்னை உற்சவ விக்ரகங்களுக்குமேல் புது டில்லி மூலவிக்ரகம் என்று ஒன்றிருப்பதை மறந்துவிட்டார்கள், காமராசரிடம் உபதேசம் கேட்ட காங்கிரஸ் தலைவர் வேங்கட சுப்பா ரெட்டியார் குழுவினர்!

புதுச்சேரி வந்து கூட்டம் கூட்டினுர்கள், குபேரை எதிர்க்கச் செய்தார்கள் எல்லோரையும்! குபேரின் தோல்வியால் சொல்லொண்ணு மகிழ்ச்சியடைந்தது, அந்தக்குழு!

"ஒழிந்தது குபேர் தொல்லை! அழிந்தது குபேர் கோஷ்டி!"—என்று குரவையாட்டம் ஆடினர்!

காங்கிரஸ் தலைவர் வேங்கட சுப்பா ரெட்டியார் முதலமைச்சரானுர்!

சட்ட மன்றம் புதுவை கமிஷனரால் திறந்து வைக்கப்பட்டது. குபேர் அன்று வரவில்லை!

ஏனே — என்று இவர்களும் இருந்துவிட்டார்கள்! ஆனுல் புலி பதுங்குவது பாய்ச்சலுக்குத்தான் என்பதை அறியாமற் போய்விட்டார்கள்!

அமைச்சரவை தேர்ந்தெடுக்கும் அன்று அசரீரி கேட்டது டெல்லியிலிருந்து! ஆம்; டெல்லி 'மூல விக்ரகம்' மூல மந்திரமொன்றைக் கூவிற்று.

அந்தப் 'பேச்சு' காமராசரின் யோசனையைத் தரைமட்டமாக்கிற்று! வேங்கடசுப்பா ரெட்டியாரின் மகிழ்ச்சியை மண்மேடாக்கிற்று! குபேருக்குப் பதவியொன்றைத் தந்தது!

ஆம்; குபேர் மத்திய அரசின் பூரண கிருபை பெற்றவரானுர்! எனவே பதவி ஓடிவந்து அவரது காலில் விழுந்தது!

'முடியாது! குபேருக்குப் பதவி கொடுக்க முடியாது!' — என்று உரிமைக் குரல் எழுப்பினுர்களா புதுவைக் காங்கிரசார்?

இல்லை! இல்லை! எதிர்ப்புப் பெருமூச்சுகூட இல்லை! தெண்டனிட்டு ஏற்றுக் கொண்டார்கள் டில்லியின் ஆக்கினையை!

யாருக்குப் பதவி இல்லையென்ருர்களோ அவருக்கு வெற்றிலை, பாக்கு, வள்ளத்தில் சந்தனத்துடன் பதவி தந்தார்கள்!

—இது புதுவையில் பெற்ற 'பொல்லாத வெற்றி'க்குப் பின் மறைந்து கிடக்கிற முடைநாற்றம் வீசும் பதவிப் புராணம்!

டில்லிக்குத் தலைவணங்கும் கதர்க் குல்லாய்களைத் தேர்ந்தெடுத்துவிட்ட புதுவை மக்கள் தினசரி கேட்டுச் சலிக்க வேண்டிய 'மந்திரிமார் அடிமை சருக்கம்!'

'புதுவையில் வெற்றி'—எனக் கூவித திரிவோர் குனிந்த தலையுடன் ஒதுங்கிடச் செய்யும் 'ஆபாசப்படலம்!'

ஆனைமலையில், அறிஞர் அண்ணு தலைமையேற்று நடத்தி வைத்த திருமண வைபவத்தில் மணமக்களான கே. ஏ. மதியழகன் பி. ஏ. அவர்களும், ராசசுந்தரி அவர்களும்! மணமகளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருப்பவர் அண்ணியார்!

18. தந்தையும் மகளும்

கரிகாலனுக்கு, எப்படியும் பாண்டியனுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியாக வேண்டுமென்ற துடிப்பு மிகுந்திருந்தது. தன் நாட்டுக்கு வந்தவன் மட்டுமல்ல; தன் உயிரையே மீட்பதற்குக் காரணமாக இருந்த செழியனைக் காப்பாற்றவேண்டியது தலையாய கடமையெனக் கொண்டான். அவன் நினைத்தால் இருங்கோவேள் எங்கே ஒளிந்திருந்தாலும் அந்த இடத்தோடு அவனை அழித்து ஒழித்துவிட முடியும்; அத்துணை ஆற்றலும் படை வலிமையும் பெற்றிருக்கிறான். ஆயினும் முத்துநகையின் கருத்துக்கு அவன் மதிப்பளித்துக் காத்திருந்தான்.

அதேபோல் புலவர் காரிக்கண்ணனார் கூறிய வார்த்தைகளும் சிந்தித்துப் பார்க்கவேண்டியவைகளாகவே அவனுக்குத் தோன்றின. செழியனை உயிரோடு விடுவிப்பதுதான் லட்சியம் என்கிறபோது ஆர்ப்பாட்டமான போராட்டம் அதற்குப் பயன்படாது என்பது காரிக்கண்ணனார் முதலில் அவனிடம் எடுத்துச் சொன்ன வாதம். அதன்படி வேறு வழிகளில் முயற்சி எடுக்க முனையும்போது முத்துநகை குறுக்கிட்டு, தானே அந்தக் கடமையை மேற்கொண்டு திறம்பட முடிப்பதாக வாக்குறுதி அளித்து அவனை அமைதிப்படுத்தி விட்டாள். இதற்கிடையே பெருவழுதிப் பாண்டியன், செழியனை மீட்கும் முயற்சியில் இறங்கியிருப்பதும் அதற்கெனப் படை அனுப்பியிருப்பதும் இன்னும் கரிகாலனுக்குத் தெரியாது.

நிம்மதியற்ற உள்ளத்தோடு சோழன். தன் மாளிகையில் அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தான். உத்திரவிட்ட நேரத்தில் பாய்ந்துசென்று பகையழிக்கும் சக்தி வாய்ந்த படைகளிருந்தும் சுட்டு விரல் அசைந்தால் எட்டுத் திக்கும் முரசுகொட்டி வெற்றிக் கொடி ஏற்றிக் காட்டும் வீரர்கள் காத்திருந்தும்—எதுவும் செய்ய முடியாத நிலையில் சோழப் பெருவேந்தன் குழப்பமுற்றிருந்தான். இருங்கோவேளைப் பிணமாக்கிப் போடவேண்டுமென்றால் ஒரு நொடிக்குள் நடந்துவிடும்.

ஆனால் செழியன்?......அவனை எப்படி மீட்பது? கேள்விக்குறிகள் நெஞ்சத்தில் ஒன்று பத்து நூறாக முளைத்தன. ஏதாவது ஒரு முடிவு கண்டேயாகவேண்டும் என்று கரிகாலன் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கிவிட்டான். இளவயதில், அவன் இருந்த இடத்திற்குத் தீமூட்டியபோது எப்படி வெளியேறுவது என அங்குமிங்கும் ஓடினானே; அப்போதுகூட அவனுக்கு இவ்வளவு குழப்பமில்லை. பாண்டியனுக்கும் தனக்கும் ஏற்பட்டுள்ள நட்புரிமைக்குக் களங்கம் ஏற்படும் வகையில் எதுவும் நடந்துவிடக்கூடாதேயென்று மிகவும் அஞ்சினான். அப்படி நட்புரிமை கெடுவது தன் ஆட்சிக்குப் பலக்குறைவு என்று அவன் எண்ணி வருந்தவில்லை. தான் வளர்த்து வரும் பண்பாட்டுக்கு ஊறு நேரிட்டுவிடுமோ என்றுதான் கவலைப்பட்டான்.

இவ்விதம் மனப்போராட்டத்தில் திண்டாடிக் கொண்டிருந்தவனின் முன்னே மெய்காப்பாளன் தோன்றி, முத்துநகை வந்திருப்பதை அறிவித்தான். "அழைத்து வா!" என்று ஆவலுடன் கூறிவிட்டு வாயிற்படி பக்கமே விழி எறிந்து காத்திருந்தான்.

அவளும் மன்னனை வணங்கியவாறு எதிரே வந்து நின்றாள். அரசனின் கண் அசைவு மூலம் நோக்கத்தைப் புரிந்து கொண்ட மெய்காப்பாளனும் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். அவளை உட்காரச் சொல்லிவிட்டுத் தானும் எதிரே உட்கார்ந்து அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதையே ஆவலுடன் எதிர்பார்த்தான் மன்னன்.

"பாண்டியர்கள் படை இருங்கோவேளை எதிர்த்துப் புறப்பட்டுவிட்டது மன்னவா!"

"என்ன? பாண்டியப் படையா? இருங்கோவேளை எதிர்த்தா?"—கரிகாலன் வியப்பிலாழ்ந்தான்.

"ஆம்—மன்னவா! பாண்டிய மன்னரின் ஒற்றர் ஒருவர் மூலம் அறிந்து கொண்டேன்."

"அப்படியானால் செழியனை உயிரோடு மீட்கும் உத்தேசமில்லையா?"

"செழியனை மீட்பதற்காகவே படையெடுப்பாம்! ஆனால் அந்தச் சேதி இருங்கோவேளுக்குத் தெரிந்து விட்டது. அவன் எச்சரிக்கையாக இருக்கத் திட்டம் தீட்டி விட்டான்."

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?"

"எல்லாம் இந்த வேடத்தின் மகிமையால்தான்! அன்று தங்களிடம் தெரிவித்தவாறு இருங்கோவேளின் கோட்டைக்குள்ளேயே நுழைந்து விட்டேன். செழியன் இருங்கோவேளின் சிறையிலேதான் அடைக்கப்பட்டிருக்கிறார். பாண்டிய மன்னருக்கு செழியன் எழுதியது போல் ஒரு ஓலை எழுதி அதை ஒரு வீரன் வாயிலாக இருங்கோவேள் அனுப்பி வைத்தான."

"என்ன ஓலை அது?"—கரிகாலன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"செழியன், இருங்கோவேளின் நண்பனாகிவிட்டதாகவும் பாண்டிய மன்னன் செழியனைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லையென்றும் செழியனைக் கொண்டே எழுதப்பட்ட ஓலையாகும் அது. முக்கியமாகப் பாண்டியர் படையெடுப்பைத் தடுத்து, அவர்களைத் திரும்பிடச் செய்யவே அந்த ஏற்பாடு. நல்லவேளையாக அந்தச் சூழ்ச்சியில் இருங்கோவேள் வெற்றி அடையவில்லை. நான் குறுக்கிட்டு ஓலையைக் கைப்பற்றி விட்டேன்."

"அப்படியா? நீயா?"

"ஏன் மன்னா வியப்பு? ஓலை தாங்கிச் சென்றவனை நானே கொன்று குவித்துவிட்டு அந்த ஓலையையும் பிடுங்கிக் கொண்டேன்."

"எங்கே அந்த ஓலை?"

"அது பாண்டிய நாட்டு ஒற்றர் வீரபாண்டியிடம் இருக்கிறது. அரசே! சொல்ல மறந்துவிட்டேனே; அந்த வீரபாண்டியைப் பற்றி! மிகவும் நல்லவர். ஒப்பற்ற வீரர். பாண்டிய நாட்டுக்காகத் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் இருங்கோவேளைச் சுற்றிக் கொண்டு திரிகிறார். படையெடுத்து வரும்படி பாண்டிய நாட்டுக்குத் தகவல் அனுப்பியதே அவர்தானாம்! பாவம்; ஒரு சாதாரண விறகு வெட்டியைப்போல காடு மேடெல்லாம் அலைகிறார். கஷ்டப்படுகிறார். ஆகா; அவரிடம் எவ்வளவு ஆழ்ந்த நாட்டுப்பற்று ஒளி விடுகிறது தெரியுமா!"

"அப்படியா? மிக்க மகிழ்ச்சி! ஆனால் சோழ மண்ணில் களங்கம் இருத்தலாகாது — களை முளைத்தலாகாது — என்று கங்கணம் கட்டிக்கொண்டு திரியும் சோழர் குடித் திலகமாம் உன்னைவிட உயர்ந்தவனோ அந்த வீரபாண்டி? இருக்க முடியாது. உன் கடமையுணர்வும் தியாக உள்ளமும் யாருக்கும் இருக்க முடியாது."

"தங்கள் பாராட்டுதலுக்கு நன்றி வேந்தே! இந்த ஊக்கம் நிறைந்த மொழிகள் மேலும் மேலும் என்னை உற்சாகப் படுத்தட்டும். எனக்கு நம்பிக்கையிருக்கிறது, எப்படியும் செழியனை மீட்டு வந்துவிடலாம் என்று! அந்த வகையில் வீரபாண்டியின் துணையும் எனக்கு நிரம்ப இருக்கிறது."

"முத்துநகை! நீங்கள் என்ன திட்டம் போட்டிருக்கிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை. பாண்டிய நாட்டுப் படைகள் இருங்கோவேளை வளைத்துக் கொள்வதால் இருங்கோவேள் பிடிபடுவான். ஆனால் செழியனைக் கொன்றுவிட்டால் என்ன செய்ய இயலும்? பொதுவாக எனக்கு இந்தப் படையெடுப்பு அவ்வளவு திருப்திகரமான திட்டமாகத் தெரியவில்லை. இதில் பாண்டிய மன்னர் என்னைக் கலந்து கொள்ளாதது ஏன் என்றும் தெரியவில்லை! செழியன் விஷயத்தில் நான் அலட்சியமாக இருந்துவிட்டதாகக் கருதியிருக்கிறாரோ என்னவோ?"

"அப்படியொன்றும் இருக்காது. ஆனால் ஒன்று. இங்கு நான் வந்ததே எதற்குத் தெரியுமா? பாண்டி மண்டலத்து ஒற்றர் வீரபாண்டி மிக அவசரமாகத் தங்களைத் தனியே சந்திக்க வேண்டுமாம். அது முடியுமா என்று தங்களைக் கேட்டுப் போகவே வந்தேன்."

"என்னை எதற்காக சந்திக்க வேண்டுமாம்?"

"படையெடுப்பைப் பற்றித்தான் இருக்குமென்று நினைக்கிறேன். தனிமையில் சந்தித்துப் பேச வேண்டுமென்று கூறினார்."

"ஓ! பேசலாமே—நான் தயாராயிருக்கிறேன். ஒற்றர் எப்போது வேண்டுமானாலும் வரலாம்."

"எங்கே அவரை அழைத்து வருவது?"

"இங்கேயே அழைத்து வரலாம். உங்களை நமது மெய்காப்பாளன் வரவேற்பான். அதன் பிறகு நான் தங்கியிருக்கும் தனியிடத்துக்கு ஒற்றர் அழைத்து வரப்படுவார்."

"அப்படியானால் இன்றிரவே அழைத்துவர முயலுகிறேன். இல்லையேல் நாளைக்கு....?"

"தாராளமாக! இதோ இப்போதே மெய்காப்பாளனுக்கும் அறிவித்து விடுகிறேன்." எனக் கூறியவாறு கரிகாலன் கையொலி செய்ய, மெய்காப்பாளன் எதிர்வந்து நின்று வணங்கினான்.

"இன்றோ, நாளையோ—முத்துவுடன் இன்னொரு ஆள் வருவார். என்னிடம் அழைத்து வரவேண்டும்." என்று அவனுக்கு உத்திரவிட்டு விட்டு முத்துநகையைப் பார்த்து, "உன்னை எப்படிப் புகழ்வது என்றே தெரியவில்லை. திறமையும் பயிற்சியும் பெற்ற தலைசிறந்த ஒற்றர்களுக்குக்கூட உன் ஆற்றல் வருமா என்பது சந்தேகமே!" என்று பாராட்டினான் பூப்புகார் மன்னன். அரசரின் புன்னகையைப் பரிசாகப் பெற்றுப் பெருமிதங் கொண்ட முத்துநகை விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

வீரபாண்டியை அழைத்து வந்து கரிகாலனிடம் சந்திக்க வைப்பதற்காக உற்சாகத்துடன் கிளம்பினாள். தன்னையறியாமல் ஒருபெரும் சதிக்குத் தான் உடந்தையாகிவிட்டோம் என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவள், மாளிகைத் தாழ்வாரத்தைக் கடந்து வெளியேறும்போது எதிரே புலவர் காரிக்கண்ணனார் வேகமாக வந்து கொண்டிருந்தார். சென்றவள் நின்று தந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீர் கலங்கிற்று.

"அப்பா!" என்று கூவிவிட இருந்தாள். சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக்கொண்டாள். புலவருக்கு தன்னைக் கடந்துசெல்வது தன் மகள்தான் என்று தெரிந்திருந்தால் "அம்மா! முத்துநகை! என் கண்ணே!" என்று ஓலமிட்டுப் புலம்பி அழுது துடித்திருப்பார்; துவண்டிருப்பார், சற்று நேரம் அவரையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அவள் போய்விட்டாள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு!

புலவர், கரிகாலனுக்கு நேரே போய் நின்றதும் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. காரணம்; புலவரின் முகத்தில் அவன் கண்ட மாறுதல்தான்! மகளைக் காணாத சோகத்தில் புலவர் முகம் மாறியிருந்ததை அவன் இதற்கு முன் கண்டிருக்கிறான். ஆனால் இப்போது அவன் காணும் அவரது முகத்தில் வேதனையை விடக் கோபமே மிகுந்திருக்கக் கண்டான்.

"புலவரே!" என்றான் ஆவலுடன்!

"சோழமண்டலத்தின் கீர்த்தி குப்பைமேடாகிவிட்டது!" என்று கத்தினார் புலவர்.

"என்ன சொல்லுகிறீர்கள்?" கரிகாலன் மிகுந்த ஆச்சரியத்துடன் புலவரிடம் நெருங்கி வந்து அவர் உதடுகளின் அசைவையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான்.

"வீரத்தை நிலைநாட்டுவது பெரிதில்லை. செல்வத்தைக் குவிப்பதும் பெரிதில்லை. உலகெங்கும் புகழ்க்கொடி நாட்டுவதும் பெரிதில்லை. ஆனால் மன்னவா!—வாய்மையைக் காப்பாற்றுவதே சிரமமான வேலை! அதைக் காப்பாற்றத் தவறிவிட்டது, சோழப் பேரரசு!"

"விபரமாகச் சொல்லுங்கள் புலவர் பெருமானே!" -கரிகாலன் ஆத்திரத்துடன் பதிலை எதிர்பார்த்தான்.

"செழியனை மீட்டுத் தருவது நமது பொறுப்பு என்று பாண்டியரிடம் சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா?"

"ஆமாம்—சொன்னேன்."

"அதற்காக இதுவரை இங்கு நடைபெற்ற முயற்சி என்ன?"

கரிகாலன் மௌனமாக இருந்தான்.

"பாண்டியன் பெருவழுதி. சோழரின் வார்த்தைக்கு மதிப்பு வைத்தது குற்றம்! இல்லையா?"

கரிகாலன் பேசவில்லை.

"எந்தப் படையெடுப்பு வேண்டாமென்று நான் தடுத்தேனோ அந்தப் படையெடுப்பு முறையால் செழியனை மீட்க வேண்டிய அவசியம் பாண்டியனுக்கு ஏற்பட்டுவிட்டது. சோழர், நிச்சயம் செழியனை மீட்கும் காரியத்தில் ஈடுபடுவார் என்று நான் வேறு பாண்டியருக்கு உறுதி அளித்திருந்தேன். இப்போது என் உறுதியும் காற்றில் பறந்து விட்டது. யாரால் மன்னா; யாரால்? எல்லாம் தங்களால் தான்!"

கரிகாலன் புலவரையே பார்த்துக் கொண்டிருந்தான்; வாய் திறக்கவில்லை.

"செழியனை மீட்கப் படையெடுப்பு முறை தேவையில்லை என்று நானே கூறினேன். இப்போது நானே பாண்டியனின் திட்டத்துக்குத் தலை அசைத்தேன்."

கரிகாலனின் உதடுகள் அசைந்தன.

"ஏன்?"

"ஏன் என்று கேட்கிறீர்கள் மன்னா? மிகவும் வேடிக்கைதான்! நமக்கு அறவே அக்கரையில்லை! பாண்டியராவது அவரது சொந்த முயற்சியில் வெற்றி காணட்டுமேயென்றுதான் அவர் இஷ்டத்துக்கு இணங்கினேன்."

"பாண்டியனுக்கு என்மீது வருத்தம்—அல்லது கோபம் — அதனால் என்னைக் கலந்து கொள்ளாமல் இருங்கோவேள் மீது படையெடுக்கிறார், இல்லையா?"

"அப்படியும் இல்லை. சோழ மன்னர் என்ன செய்வதென்று புரியாத நிலையில் குழப்பமடைந்து இருக்கிறார். போரில் வென்ற நாட்டைத் திரும்ப இருங்கோவேளிடம் கொடுத்து அதற்குப் பதில் ஒரு சாதாரண உயிரை மீட்பது என்பது முடியாத காரியம்தான். இந்நிலையில் சோழருக்குத் தொல்லை கொடுக்காமல் நாமே செழியனை மீட்க முயலுவோம்—என்று துணிந்து விட்டார். அவ்வளவுதான்!"

"அவசரக்காரர்!"

"அலட்சியத்தைவிட அவசரம் எவ்வளவோ மேல் என்பேன் நான்!"

"அலட்சியம் — அவசரம்— இரண்டுக்குமிடையே அமைதியோடு தெளிவான காரியங்களில் ஈடுபடுதல் என்ற ஒரு குணமும் இருக்கிறது புலவர் அவர்களே! தங்களுக்குத் தெரியாதவைகளையா நான் கூறப் போகிறேன்?"

"என்ன கூறினாலும் சரி; நம் நாட்டுக்கு வந்து நம் உயிரைக் காப்பாற்றும் முயற்சியில் அல்லற்படும் ஒரு வீரனைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பது பண்பே அல்ல! நல்லவர்களுக்கு அழகே அல்ல! இதற்குப் பெயர்தான் கடைந்தெடுத்த தன்னலம்!"

"போதும் புலவரே! போதும்! இந்தக் கரிகாலனைத் தாங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. செழியனை மீட்பதற்காக நான் எத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன் என்று தங்களுக்குத் தெரியாது. தாங்கள் இங்கு வரும்போது தங்களைக் கடந்து சென்றானே, ஒரு இளம் வீரன் அவனைப் பார்த்தீர்களா?"

"ஆமாம்; பார்த்தேன்!"

"யார் அவன்?"

"ஒற்றன் என்றீர்கள் அன்று!"

"ஒற்றன் மட்டுமல்ல; உங்கள் காணமற்போன மகள் முத்துநகையுங்கூட!"

"ஆ! என்ன—என் மகளா! முத்துநகையா?"

"ஆமாம்! அவளைக் கேட்டுப் பாருங்கள். செழியனை மீட்பதற்கு நான் எவ்வாறெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்று! முத்துநகை மட்டும் குறுக்கிடாதிருந்தால் இருங்கோவேளின் தலை எப்போதோ கீழே விழுந்திருக்கும். உங்கள் மகள் அளித்த உறுதியின் பேரில்தான் செழியனை எப்படியும் தந்திரமாக மீட்டுவிடலாம் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறேன். அதற்குள் அவசரப்பட்டுவிட்டார் பாண்டியர்!"

திருமண அழைப்பு

❋

அன்புடையீர்!

வணக்கம். எங்களது திருமணம் 28—9—59 திங்களன்று காலை 9 மணியளவில் கோவை ஸ்டேன்ஸ் மில் கல்யாண மண்டபத்தில் அறிஞர் அண்ணா எம். ஏ., எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

தங்களன்புள்ள,

பி. எஸ். சானகிராம்,

உரிமையாளர்: அண்ணா டிரான்ஸ்போர்ட்,
கோவை மாநகராட்சி மன்ற உறுப்பினர், தி. மு. க.

டி. சம்பூர்ணம்,

தலைமை ஆசிரியை, நகராட்சி ஆரம்பப் பள்ளி, கோவை.

"மன்னவா! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் மகள் எப்படி இங்கு வந்தாள்? காணமற்போன என் கண்மணி இங்குதான் இருக்கிறாளா? ஆகா! நான் எவ்வளவு பேறு பெற்றவன். என்னைப் போன்ற புகழுடையவன் யாருமே இருக்கமாட்டார்கள். இப்படியொரு நாட்டுப்பற்றுள்ள செல்வத்தையா நான் மகளாகப் பெற்றிருக்கிறேன். அடடா! இந்த வார்த்தைகள் என் செவிகளில் செந்தேனாகப் பாய்கின்றனவே! அரசே! என்னை மன்னித்துவிடுங்கள். அவசரப்பட்டு ஆத்திரத்தில் ஏதேதோ கூறிவிட்டேன்."

—என ஆனந்தக் கண்ணீர் பொங்க நின்றார் காரிக் கண்ணனார்.

"பரவாயில்லை புலவர் பெருமானே! தாங்கள் ஒன்றும் தவறு செய்துவிடவில்லையே. மன்னனின் கடமையை எடுத்துரைத்தீர்கள். அவ்வளவு தானே— எனக்கிருக்கும் வருத்தமெல்லாம் என் நண்பர் பாண்டியர் என்னைக் கலந்து கொள்ளாமல் இருங்கோவேள் மீது படையெடுத்து விட்டாரே என்பதுதான்!" என மிகக் கவலையுடன் கூறினான் கரிகாலன்.

"இல்லை மன்னா—தங்களுக்குத் தொல்லை தரக்கூடாது எனபதே அவர் எண்ணம். இருப்பினும் இப்போதும் ஒன்றும் முழுகிவிடவில்லை. தாங்கள் என்ன சொல்கிறீர்களோ அதன்படி அவரை நடக்கச் செய்வது என் பொறுப்பு!"

—என்று புலவர் கடமையுணர்ச்சியுடன் பதில் கூறினார்.

"இருங்கோவேளை மடக்கு முன் நானும் பாண்டி நாட்டுத் தளபதியும் சந்திப்பது நல்லது. பாண்டி நாட்டு ஒற்றன்கூட என்னை சந்திப்பதாக முத்துநகையிடம் கூறி அனுப்பியிருக்கிறான். அது போலவே தளபதியையும் சந்திப்பது முக்கியம் என்று கருதுகிறேன்."

"அதற்கென்ன — இப்போதே நானே போகிறேன். படை வரும் வழியில் தளபதி நெடுமாறனை சந்தித்து தங்களிடம் அழைத்து வருகிறேன். நேரில் பேசி ஆக வேண்டியவைகளைச் செய்யுங்கள்."

"அதுவே நலம்! புலவர் பெருமானே! தாங்கள் உடனே புறப்படுங்கள். தாங்கள் போனால்தான் அவர்களிடம் விளக்கமாகப் பேச முடியும். இல்லையேல் 'எனக்கு ஆணையிட சோழன் யார்?' என்று கேட்டாலும் கேட்டுவிடுவார்கள்!"

"அய்யோ! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். எனக்கு நேரே தங்களைப் பற்றி ஒருவன் அப்படிப் பேசித் தப்பிவிடுவானா? நான் கற்ற தமிழாலேயே அவனைக் கொன்றுவிடுவேன்; மன்னா —கொன்றுவிடுவேன்!"

"மகிழ்ச்சி! புலவர் பெருமானே! விரைவில் தளபதி நெடுமாறனுடன் வந்து சேருங்கள்."

"அரசே! அதற்குள் மீண்டும் என் முத்து இங்கு வந்தால் நான் வரும்வரையில் அவளை எங்கும் போகவிடாதீர்கள்! இங்கேயே..."

"இருக்க வைக்கிறேன். சென்று வாருங்கள்!"

—புலவர் விடைபெற்றுக் கொண்டு புறப்பட, சோழன் ஏழடி பின்னே நடந்து சென்று அவரை வழியனுப்பிவைத்தான்.

[தொடரும்]

கலப்படம்

ஏழுபேர் பேச்சில் இரஷ்ய ராக்கெட்!

விஞ்ஞானி

சந்திரன் என்பது பூமிக்கு அருகிலுள்ள ஒரு சிறு கோளம். இரண்டு லட்சம் மைல்கள் நமக்கும் அதற்குமுள்ள தூரம்.

சந்திரனில் மழை, காற்று, பனி, மேகம் எதுவுமே கிடையாது. அதனால் புல், பூண்டு, உயிர்—முதலியனவும் இல்லை.

வளையம் வளையமாக உள்ள மலைகள். ஆழம் காணமுடியாத பள்ளத்தாக்குகள்; குழிகள்! வறண்ட தரை.

—இந்தச் சந்திரனை அடைய நாங்கள் பட்டபாடு — அடடா! சொல்லிமுடியாது.

1919–ம் ஆண்டிலேயே சந்திரனைப் பற்றித் தெளிய ஆரம்பித்துவிட்டோம்! அதன் இயல்புகள் பற்றிக் கணக்கிட ஆரம்பித்துவிட்டோம். அங்கு எப்படியாவது போயாக வேண்டும்—என்று எண்ணினோம். வழிவகை இல்லை. ஆனால் இன்று ரஷ்ய விஞ்ஞானிகள் அந்தச் சாதனையைப் புரிந்துவிட்டனர். லூனிக்-2 எனும் ரஷ்ய ராக்கட் சந்தரனை அடைந்து வெற்றிக் கொடி நாட்டிவிட்டது! விஞ்ஞானத்திலே இன்னொரு மைல் கல்லை அடைந்துவிட்டனர்!

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள்!

நாங்கள் ரஷ்ய வெற்றியைக் கண்டு பெருமிதப்படைகிறோம். அதன் ஒலியை நாங்களும் பதிவு செய்து கொண்டபிறகே இப்படிப் பேசுகிறோம். ரஷ்யர்களின் வெற்றி, பிரம்மாண்டமான விஞ்ஞான வெற்றி! நாங்கள் வியக்கிறோம்! எங்கள் வியப்பை அளக்கவே முடியவில்லை!

ராஜாஜி

சும்மா அளக்காதீர்கள். எனக்கொன்றும் இதில் வியப்பில்லை. ரஷ்ய ராக்கட் சந்திரனுக்குப் போனால் நமக்கென்ன? கூட்டுறவுச் சாகுபடி நின்று போய்விடும்? நிலச் சுவான்தார்கள் துன்பம் குறைந்தாவிடும்?—அல்லது — சுதந்திரக் கட்சிக்குத்தான் பலம் சேர்ந்துவிடுமா?—இன்னும் சொல்லப்போனால் இந்த 'விஞ்ஞான சாதனை'யைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் இந்த சாதனையைச் செய்தவர்களான ரஷ்யர் கூட்டுறவு முறையிலே விவசாயம் செய்பவர்கள். எனவே மக்கள் யாரும் இதைப்பற்றி ஆச்சரியப்படக் கூடாது!—குறிப்பாக சுதந்திரக் கட்சிக்காரர்கள் யாரும் இதைப்பற்றிப் பெருமையாகப் பேசக் கூடாது. இதென்ன பெரிய சாதனையோ? 'வியாசர் விருந்திலே' கண்ணன் மலையை எடுத்துக் குடை பிடித்தானே அதைவிடவா இது பெரிய செயல்? வாயைத் திறந்த மாத்திரத்தில் அண்ட கோளங்களும் கண்ணன் வாயில் தெரிந்ததே அதை விடவா இது பெரிது?

புராணிகன்

அப்படிக் கேளுங்கள் ராஜாஜி! உங்களைப் போன்றவர்கள் அடிக்கடி எங்கள் பேரில் தயவு வைக்காவிட்டால் நாங்கள் வாழ்வதெப்படி? 'ஒரே புளுகு மூட்டை'—என்று நான் சொல்லுவதை மக்கள் தள்ளி விடுகின்றனரே, இந்தப் பாழாய்ப் போன ராக்கட் செய்திகளைக் கேட்ட பிறகு!

பாற்கடலைக் கடையும்போது தோன்றியது சந்திரன். அவனுக்கு நட்சத்திரங்களெல்லாம் மனைவிமார்கள். சாபத்தினால் அவன் தேய்கிறான்; வளர்கிறான். சிவபெருமான் முடியில் அவன் இருக்கிறான்—என்று இப்போது கூறினால் அலட்சியப் படுத்துவோர் ஆயிரம், ஆயிரம்!—அட, கொஞ்சம் சமயோஜிதத்தைக் கலந்து பேசியும் பார்த்தேன்.

'நம்முடைய அதர்வண வேதத்தை மேல்நாட்டார்கள் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அந்த வேதத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டுதான் ஆகாய விமானம், ராக்கட், சந்திரனுக்கு வழி எல்லாம் கண்டுபிடிக்கிறார்கள்'—என்றும் சொல்லிப் பார்த்தேன். கேட்பாரில்லை! கன்னம் பழுக்க அறை விழும் போல் இருக்கிறது.

கவிஞன்

அறை விழாமல் என்ன செய்யும்? காலத்தோடு ஒட்டி ஒழுக வேண்டுமப்பா! எங்கள் பரம்பரையும்தான் உன்னைப் போல் நாப்பிளக்கப் பொய்யுரைத்து வந்தது. சந்திரவம்சம்—என்றும், சந்திர கிரகணம் என்றும் பாடி வந்தது! ஆனால் இப்போதோ மாற்றிக் கொண்டோம் நடையை! அதனால் எங்கள் கடையில் நல்ல வியாபாரம்! விஞ்ஞானத்திற்கு 'வாழ்த்துக் கூறுகிறோம். 'வியப்போ வியப்பு!' —எனப் பாடுகிறோம்!

குருஷேவ்

நீ பாடி என்னப்பா செய்ய? நான் எதிர்பார்த்தது அமெரிக்காவில் இல்லையே! நான் அமெரிக்காவிற்குப் போவதற்கும், ராக்கட் சந்திரனுக்குப் போவதற்கும் சரியாக இருக்க வேண்டும்—என்று என் 'விஞ்ஞானிக் காம்ரேடு'களிடம் கூறினேன்!

உடனே நிறைவேற்றினார்கள்! எங்கள் சாதனையைக் கண்டு அமெரிக்க மக்கள் பயந்து, பக்தியுடன் வரவேற்பார்கள்—என்று எண்ணி உள்ளே போனேன்! பலர் வரவேற்புக் கூறுகிறார்கள்! சிலர் பயங்கரச் செயல்களைச் செய்கிறார்கள்!

ஒரு பெரிய மாடியிலிருந்து 'இதுதான் அமெரிக்க நகரம்!'—என்று என்னிடம்கூறி தங்கள் நாட்டைக் காட்டி விட்டதாகப் பெருமை கொள்கிறார்கள், அமெரிக்கர்!

சினிமாப் படம் தயாரிக்கும் வால்ட் டிஸ்னியின் ஸ்டுடியோவிற்குள் போய்ப் பார்க்க வேண்டும்—என்று ஆசைப்பட்டேன். பெரிய வல்லரசுத் 'தலைவன் ஒருவனின் இந்த 'அற்ப' ஆசையை நிறைவேற்றித் தருவார்கள் — என்று நினைத்தேன்: ஏமாந்தேன்!

'முடியாது! நீங்கள் உள்ளே போனால் திரும்பி வரமுடியாது!'

—என்று அமெரிக்கப் போலீசார் கூறிவிட்டனர்!

ஒரு ஆளைக் காக்க முடியாத இவர்களா ஒரு இனத்தையே —நீக்ரோ இனத்தையே நிறவெறி கொண்டவர்களிடமிருந்து காப்பாற்றப் போகிறார்கள் — என்று நினைத்துக் கொண்டேன். என்னதான் 'ராக்கட் ஸ்டண்ட்' செய்தும் ஒரு பயனும் இல்லையே; நான் நினைத்த இடத்திற்குப் போக முடியவில்லையே! இந்த 'ராக்கட் வெற்றி' இனி இருந்தென்ன? போயென்ன?

காமராஜ்

சே...சே! நீங்கள் அப்படிச் சொல்லிவிடக்கூடாது. இந்த ஒரு செய்தி எங்கள் பிரச்சார பீரங்கிகளுக்கு நாலு மாதம் வரை போதுமே! 'விஞ்ஞானம் வளர்ந்து விட்ட இக் காலத்தில் —ரஷ்ய ராக்கட் சந்திரனுக்குப் போகிற காலத்தில் பரத கண்டத்தைப் பிரிக்க வேண்டும்— என்ற வாதமா?' — என்று நாங்கள் கேட்போம். ரஷ்ய ராக்கட்டுக்கும் பிரிவினை வாதத்திற்கும் ஏனய்யா முடிச்சுப் போடுகிறீர்கள்—என்று கேட்கலாம். நீங்கள்! சம்பந்தமில்லாமல் பேசுவது தானே எங்கள் வழக்கம்? இப்போது 'விஞ்ஞான வளர்ச்சி' —எங்களிடம் சிக்கிக் கொண்டது. இனி அதே கூச்சல்தான்! விஞ்ஞானம் வளருகின்ற இந்நாட்டில்...

புத்தக வியாபாரி

எங்கய்யா வளருது விஞ்ஞானம் இந்த நாட்டில்? என் கடையை வந்து பாருங்கள். தப்பித் தவறி அடித்த விஞ்ஞானப் புத்தகங்கள் தூசு படிந்து தூங்குவதை! விலை குறைவாகப் போட்டாலும், பக்கங்கள் அதிகமாகப் போட்டாலும், பயனுள்ள விஷயங்கள் சேர்த்தாலும் வாங்கிப் படிப்போர் இல்லையே? சாதாரண விஞ்ஞானப் புத்தகங்களை வாங்கிப் படிக்க இந்த நாட்டில் ஆளில்லை; விஞ்ஞானம் வளருதாம், விஞ்ஞானம்!

சென்னைக் கல்லூரிகள் தமிழ் மன்றம்.

*

கவிதை அரங்கம்.

*

சென்னை நகரில் உள்ள கலை, தொழிற் கல்லூரி மாணவர்கள், கீழ்க்காணும் தலைப்புக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து முழுத் தாளில் இரு பக்கங்களுக்கு மேற்படாமல் (ஏறத்தாழ அறுபது வரிகளுக்குமேல் அமையாமல்) கவிதை புனைந்து, 16—12—1959—ம் தேதிக்குள் செயலாளர் முகவரிக்கு (31, இறுதி ஆண்டு மாணவர் விடுதி, எம். ஐ. டி. குரோம்பேட்டை) அனுப்புதல் வேண்டும். இதற்குக் கட்டணம் ஏதுமில்லை. சென்னைக் கல்லூரி மாணவர்கள் யாவரும் இதில் கலந்து கொள்ளலாம். கவிதையில் கருத்து நயம், சொல் நயம், பா நயம் ஆகியவை கவனிக்கப்பெறும்.

தலைப்புக்கள்:

1. எழில்
2. மொழி
3. நெஞ்சம்
4. வீரம்
5. காதல்

1. தேர்வுக் குழுவினரால் ஆய்ந்தெடுக்கப்பெறும் சிறந்த பதினைந்து கவிதைகள், அவற்றை எழுதியவர்களாலேயே, தமிழகத்தின் முப்பெருங் கவிஞர்கள் முன்னிலையில் அரங்கேற்றப்பெறும்.
2. இங்ஙனம் அரங்கேற்றப்பட்ட 15 கவிதைகளுள் தலைசிறந்த இரண்டு கவிதைகள் எழுதியவர்களுக்கு 'கல்லூரிக் கவிஞர்' என்ற சிறப்புப் பெயருடன் வெண்பொற் கோப்பைகள் பரிசாக அளிக்கப்படும்.
3. மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது பரிசுகளாக சிறந்த இலக்கிய நூல்கள் வழங்கப்பெறும்.
4. சிறந்த கவிதைகள், இலக்கிய இதழ்கள் ஏதாவது ஒன்றில் வெளியிடப்பெறும்.

இங்ஙனம்,

ஆரூர் ஆனந்தன்,
செயலாளன்,
சென்னைக் கல்லூரிகள்
மாணவர் தமிழ் மன்றம்.
சென்னை

சுழல் விளக்கு

மாலுமி

பி. துரைக்கண்ணன்; செந்திட்டை.

(?) கிருஷ்ணமேனனின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

நன்ருகத்தான் இருக்கும். எல்லையோரத்தில் ஏற்படும் தாக்குதல்களைச் சமாளிக்கும் பதவியை இதுவரை வகித்து வந்தார். இனி வெளிநாடுகளில் நேருவின் கொள்கைகளுக்கு விழும் 'அடிகளைத் தாங்கும் பாதுகாப்பு மந்திரி'யாக இருந்து வருவார்.

சண்முகம்; கரந்தை.

(?) புதிய உணவு மந்திரி எஸ். கே. படீல் எச்சரிக்கை விட்டிருக்கிருராமே 'அபாயம்; அவசரம்!'—என?

தேர்தல் காலத்து ஸ்டண்டுகளில் தேர்ந்த இவரை, உணவு தானிய விவகாரத்திற்குள் விட்டிருக்கிருர்கள், பாவம்! 'தேர்தல் ஜுரப் பிதற்றலை' இங்கேயும் சொல்லிப்பார்க்கிருர். அவ்வளவுதான்!

டி. மணி; பசுமலை.

(?) 'தனித் தமிழ்'ப் பிரியர்கள்தான் தமிழுக்குக் கேடு செய்பவர்கள்—என்கிருரே ஒரு அமைச்சர்?

தனித் தமிழ் வேண்டுபவரின் பணியே தமிழைக் கெடுத்ததென்ருல், இவர் ஆதரிக்கும் 'மணிப்பிரவாஹாள' தமிழ்ப் பிரியரால் தமிழின் பிரேதக் குழிதானே தோண்டப்படும்?

சி. வரதராசன்; சிதம்பரம்.

(?) நகரசபைகளில் ஏன் அடிக்கடி தகராறுகள் விளைகின்றன?

உடலில் பெருகி, குடியிருப்பு அமைத்துக் கொண்ட நோய்க் கிருமிகளுக்கும், புதிதாக உற்பத்தியாகிடும் வெள்ளை அணுக்களுக்கும் சண்டை வருவது இயற்கைதானே? ஏகபோகமாய் அனுபவித்து வரும் உரிமையைப் பறிக்க தி. மு. க. எனும் வெள்ளையணு உள்ளே நுழைந்தால் ஆத்திரம் வராதா காங்கிரஸ் —எனும் நோய்க் கிருமிகளுக்கு?

சீரங்கன்; கும்பகோணம்.

(?) வடநாட்டில் வெள்ளமாமே?

ஆமாம்; இனி பிரதமர் விமானத்தில் பறப்பார். ராணுவம் உதவிபுரிய ஓடும். வெள்ள நிவாரண நிதிகள் நாடெங்கும் வசூலிக்கப்படும். ஏனென்ருல் வடநாட்டில் வெள்ளமல்லவா?

வி. வெள்ளியங்கிரி; மதுரை.

(?) குருஷேவ் ஒரு அரசியல் கோமாளியா?

அப்படித்தான் தெரிகிறது. அமெரிக்காவில் ரஷ்யப் பிரதமர் சுற்றுப்பயணம் நடத்துவதாக நமக்கு நினைவே வருவதில்லை. ரஷ்ய நாட்டுக் கோமாளிதான் சுற்றுப் பயணம் நடத்துவதாகத்தோன்றுகிறது, அங்கிருந்து வரும் அடிதடிச் செய்திகளைக் காணும்போது!

சௌந்தர்; அரக்கோணம்.

(?) 'இந்தியைத் திணிக்கும் படி ஆர்ப்பாட்டம் நடத்தாதீர்'—என்று இந்தி வெறியர் சேத் கோவிந்ததாசே வட நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிருராமே?

இப் பேச்சு நம்முடைய இந்தி எதிர்ப்பின் வலிமையைக் காட்டினுலும் காட்டலாம். அல்லது 'நான் அடிப்பது போல் அடிக்கிறேன். நீ அழுவது போல் அழு' எனும் வட நாட்டு நாட்டார் தந்திரத்தைக் காட்டுவதாகவும் அமையலாம்!

சு. வேலு; தஞ்சை.

(?) காங்கிரஸ் ஆட்சியில் நிலச் சீர்திருத்தங்கள் எப்போது வரும்?

நிலமெல்லாம் 'பலவந்தமாக' சீர் திருந்திய பிறகு!

பி. சூரியநாரயணன்; திருச்சி.

(?) திராவிட நாட்டில் மார்வாரிகள் வாழ முடியாதா?

மெய் வருந்த உழைத்து வாழலாமே! சுரண்டிப் பிழைக்க முடியாது. வட்டிக்கடை வைக்க முடியாது. அதோடு குஜராத்தி மொழியில் கணக்கும் வைக்க முடியாது!

சிங்கராயன்; பவானி.

(?) டில்லியிலுள்ள 'அசோகா ஓட்டலின்' சிறப்பு என்ன?

அங்கு நாய்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அதோடு வேட்டி கட்டினவர்களும் — அதாவது இந்த நாட்டினரும் அனுமதிக்கப்படுவதில்லை!

பார்த்தசாரதி; நெகமம்.

(?) காங்கிரஸ் தலைவியான பிறகும் நேருவுடன் சுற்றுகிருரே இந்திரா காந்தி?

இன்னும் பயிற்சி முடியவில்லை! காங்கிரஸ் தலைவர் ஆகுதல்——எனும் முதலாம் பரீட்சையில் தேறிவிட்டார் இந்திரா காந்தி. அடுத்து பிரதம மந்திரி ஆகுதல் எனும் பரீட்சை இருக்கிறதே!

பி. மலையான் ; சென்னை 1.

(?) மணிமேகலையை இயற்றியவர் கூலவாணிகன் சாத்தனுர் என்கிருரே 'தமிழைக் காக்கும் ஒருவர்'. அது சரியா?

இன்னும் முடிவாகாத பிரச்சினை அது."மதுரைக்கூலவாணிகன் சாத்தன் வேறு. மணிமேகலை இயற்றிய சீத்தலைச் சாத்தன் வேறு. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று கூறப்பட்டாலும் அவை தோன்றிய காலம் ஒரே காலமன்று! எல்லாச் சமயங்களையும் சமத்துவ நோக்குடன் பார்த்த இளங்கோ அடிகள், மற்ற சமயங்களை ஏசித் தூற்றும் 'மணிமேகலையை' தம் முன்னிலையில் அரங்கேற்ற அனுமதித்தார் — என்பது நம்ப முடியாத ஒன்று. மேலும் மதுரைக் கூலவாணிகன் சாத்தன் பாடிய மற்ற பிற பாடல்களில் 'மணிமேகலை'யின் காப்பியக் கருத்தோ, நடையோ துளிகூட இல்லை" — என்பதே நல்ல தமிழ் ஆராய்ச்சியாளர்களின் கருத்து!

சி. சுந்தரம்; ஊத்துக்குளி.

(?) நேருவின் கோபத்தைச் சம்பாதித்தவர்கள் யார்? யார்?

* விடுதலை கேட்கும் மக்கள்!
* அவர் பேச்சுக்கு எதிர்ப்பேச்சுப் பேசுவோர்!
* அவரைக் 'கோழிக்குஞ்சு இருதயம் படைத்தவர்' என்று ஏசிய தென் கொரியா அதிபர் சிங்—மன்—ரீ.
* 'திருடனைப் பிடி — என்று கூறும் திருடனைப்போல் நடக்கிறது'—என்று இந்தியாவையும், நேருவையும் தாக்கும் திபெத் நாட்டு பஞ்சன்லாமா!

(?) பாரதி விழா போன்ற விழாக்களில் அமைச்சர்கள் அடிக்கடி கலந்து கொள்கிருர்களே, ஏன்?

அடுத்து உப தேர்தல்கள் வருகின்றன அல்லவா? அதற்கான தேர்தல் விளம்பரச் செலவைக் குறைக்கத்தான்!

டி. ராசன்; பீளமேடு.

(?) சுதந்திரக் கட்சிக்கு ஆள் சேருமா?

இப்போதைய கொள்கைகளுக்கு ஆள் சேருவது கடினம். ஆனுல் பலம் சேரும். சோஷலிசம் வேண்டாம்-எனும் பண பலம் கொண்டவர்களுடைய வாதத்தையல்லவா சுதந்திரக் கட்சி பேசி வருகிறது?

இராசேந்திரன்; பழனி.

(?) இந்த நாட்டில் செல்லாதவை எவை?

* மஞ்சள் அணுக் காசுகள்.
* மஞ்சள் பெட்டி.
* சுதந்திரப் போராட்டத்தில் செய்த தியாகம்.
* 'சோஷலிசம் இந்த நாட்டிற்கு உதவாது.' என்ற கூற்று.
* 'வடமொழிக் கலப்பு தமிழில் வேண்டும்' என்போர் பேச்சு!

சி. வீராசாமி; மங்களூர்.

(?) பாகிஸ்தானில் ஆக்ஸ்போர்டு அகராதி தடை செய்யப்பட்டிருக்கிறதா?

ஆமாம்; அந்த நாட்டினர் 'தாங்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் வசிப்பவர்கள்'—என்று ஆக்ஸ்போர்டு அகராதி கூறும் வாசகத்தை எதிர்க்கிருர்கள். தனிப் பூகோளம் அமைந்த நாடு — சுதந்திர நாடு—என்றிருக்க வேண்டும் — என ஆசைப்படுகிருர்கள். ஏகபாரதத்திலிருந்து நாளுக்கு நாள் பர்மா தனியாகவும் இலங்கை தனியாகவும், பாகிஸ்தான் தனியாகவும் வெட்டிப் பிளந்த பிறகும்கூட 'பாரத தேசம் என்று பெயர் சொல்லுகின்றவர்கள்' இருக்கும்போது பாக்கிஸ்தானிகளின் எதிர்ப்பு — கொதிப்பு நியாயம் தானே?

வெள்ளையைக் கருப்பாக்கும் புள்ளிவிபரம்!

❊

'உலகில் மூன்றுவிதமான பொய்கள் இருக்கின்றன. பொய்! அதைவிடப் பெரிது புளுகு. இவற்றையெல்லாம் விடப் பெரிது புள்ளி விபரம்!' — என்று மேனாட்டுக்காரன் ஒரு தடவை கூறினுன்.

அவன் கூறியது முழுக்க முழுக்க உண்மையோ என எண்ணும் வண்ணம் இந்நாட்டின் அமைச்சர்கள் நிரூபித்து வருகிருர்கள். 'நாட்டு வளம் ஏன் இப்படிச் சீர்குலைந்து கிடக்கிறது'?—என்று கேட்டால் போதும்!

உடனே புள்ளிவிபரங்கள்!

'சர்க்கரை விலையேற்றமாமே! சர்க்கரை கிடைப்பதில்லையாமே! மக்கள் அவதிப்படுகிருர்களாமே ?' — என்று கேட்டால் போதும்!

உடனே புள்ளிவிபரங்கள்!

'சென்னை மாநிலம் பூராவும் ஆயிரக்கணக்கில் நியாய விலைக் கடைகள் உள்ளன!

சென்னை நகரில் மட்டும் 891 கடைகள் உள்ளன.

அங்கு சர்க்கரை வீசை விலை ரூ. 1·65!

—இப்படி அடுக்கிக்கொண்டே போவார்கள், சட்ட மன்றத்திலே அமைச்சர்கள்!

வெளியே வந்து நாட்டு நிலைமையைப் பார்த்தால்...

நியாய விலைக் கடைகளிலே நியாயம்கூட விலைக்குத்தான் தரப்படுகிறது!

கேட்ட போதெல்லாம், 'சர்க்கரை இல்லை; இல்லை!"—என்ற பதில்தான்!

'கள்ள மார்க்கட்' விலையோ—வீசைக்கு ரூ. 2-50!

★ ★ ★ ★

புள்ளிவிபரப்படி வீசை விலை ரூ. 1-65 !

உண்மை நிலவரப்படி ... 2-50!

ஏனிந்த ஏமாற்றுவித்தை?

சட்டமன்றத்திலே உட்கார்ந்திருப்போரின் சம்மதத்தைப் பெறத் தயாரிக்கப்படும் பொய்க்கணக்கின் பெயர்தானு புள்ளிவிபரம்?

நடைமுறைக்கு ஒத்துவராத கணக்கெடுப்பிற்குப் பெயர்தான் புள்ளிவிபரமா?

அமைச்சர்கள் அடிக்கடி நம்மை நோக்கி 'உங்களுக்குப் புள்ளிவிபரம் தெரியுமா?'—என்று கேட்கிருர்களே, அந்தப் 'புள்ளிவிபரம்' இந்த இனத்தைச் சார்ந்ததுதானு?



தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும் தபால் மூலமும் 1000—க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை—1

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்று பூர்த்தி செய்து

7-10-59

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

10-10-59

முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும், பேசவும், கட்டுரைகள் வரையவும், கடிதப் போக்குவரத்து செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும் — சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்—எனில் மிகைப்படுத்தி சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு

❋

1. 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.

2. ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம்.

3. இங்கிலீஷ் ஓரளவுக்குத் தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகவும் பயிற்சி அளிக்கப்படும்.

4. இந்தத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விபரங்களையும் எட்டு புதிய காசுகள் தபால்தலை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

நூலேணி

மாவலிக்கோட்டை புரட்சி

எழுதியவர் : வேலவன்

மாவலிக்கோட்டை என்னும் பாளையத்தில் கொடுங்கோலாட்சி புரிந்த மன்னனைக் கவிழ்த்துவிட்டு, மக்களாட்சி என்ற போர்வையில் தளபதி நரசிம்மன் சர்வாதிகாரியாகி எதிர்ப்போரை ஈவிரககமின்றிக் கொலை புரிந்து வருகிறான். அவனிடத்தில் அச்சங்கொண்ட மந்திரி ராமராயனும் துணைத் தளபதி பாஸ்கரனும் வேறு வழியின்றி அவனுக்குத் துணை நிற்கின்றனர். ஆனால் மதுரையிலிருந்து கிளம்பிய சங்கரபாண்டியன் என்ற வீரன் மாறுவேடமணிந்து தீரச் செயல் பல புரிந்து தளபதியை எதிர்த்தொழிக்கிறான். அவனுக்கு உறுதுணையாயிருப்பவள் ரோகிணி என்ற சாகசக்காரி. இறுதியில் மக்கள் விருப்பப்படி துணைத் தளபதி ஆட்சிப் பொறுப்பேற்கிறான்.

சிக்கலில்லாத சரளமான ஓட்டம்.

[வெளியீடு: பிரேமா பிரசுரம், சென்னை—24. விலை ரூபாய் 1—25.]

கட்டையசிம்மன்

எழுதியவர்: சந்திரமோகன்.

கட்டபொம்மனைத் தூக்கிலிட்டபின் கலகலத்துப் போயிருந்த தமிழகத்தில் கும்பினியார் அட்டகாசம் அதிகமாயிருந்ததாம். யாரும் எதிர்க்கத் துணியாத நிலையில் கட்டையசிம்மன் என்ற மர்ம மனிதன் வெள்ளை ஆட்சிக்கெதிராகப் பல சாகசச் செயல்கள் புரிகிறான். அவன் யார் என்றே அவன் துணைவர்கள் கூட அறிய இயலவில்லை. இந்நிலையில் அவனைப் பிடிக்கவந்த ஒற்றனிடம் அவனை அறியாத அவனது மனைவி காட்டிக் கொடுத்துவிடுகிறாள். பிறகு தவறையுணர்ந்து அவனைக் காப்பாற்ற முற்படுகிறாள். அவனும் மாறுவேடமணிந்து இறுதியில் தப்பிவிடுகிறான்.

துவக்கத்திலுள்ள ஆர்வம், கதையை மேலும் படிக்கையில் நீடிப்பதில்லை. எனினும், சம்பவங்களின் தொகுப்பு ஒரு விதமான சுவை காட்டுகின்றது.

[வெளியீடு: பிரேமா பிரசுரம், சென்னை—24. விலை ரூபாய் 1—50.]

மகாத்மா காந்தி பொன்மொழிகள்

எழுதியவர்: அரு. ராமனுதன்

காந்தியடிகளின் அரிய கருத்துரைகளைப் பல்வேறு தலைப்புகளின்கீழ் அகர வரிசையில் தொகுத்து திருக்குறள்போலக் கையடக்கமான அளவில் தந்துள்ளனர். சிறந்த முயற்சி. காந்தியவாதிகள் கையில் கட்டாயம் இருக்க வேண்டிய நூல். உலகப் பெரியாரின் கருத்துக்களை அழகுறத் தொகுத்து, வகைப்படுத்தி விலை கொடுத்து வாங்கிப் படிப்போரின் உள்ளம் மகிழும்படி அமைந்திருக்கிறது.

[வெளியீடு: பிரேமா பிரசுரம், சென்னை—24. விலை அணு 8.]

மனிதனின் கதை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பதினோரு ஆண்டுகளுக்குக் குடியரசு முறையைப் பரீட்சை செய்து பார்த்தது. பார்லிமெண்ட் கட்சியை வெற்றிவாகை சூடச் செய்தஆலிவர் கிராம்வெல் சர்வாதிகாரம் பெற்ற குடியரசுத் தலைவனாக விளங்கினான். குடியரசு சர்க்கார் நிலைத்துச் செயல்பட முடியாமல் தோல்வியடைந்தது, ஆலிவர் கிராம்வெல் பலம் பொருந்தியவனாக விளங்கினான்; ஆனால் அவனுடைய சகாக்கள் அதிகார மமதையும் மதக் கொள்கைகளில் குறுகிய புத்தியும் உடையவர்களாக விளங்கினர். இதனால் கிராம்வெல்லின் மரணத்துக்குப்பின் அவன் ஏற்படுத்திய குடியரசும் வீழ்ச்சியடைந்தது. ஆகவே 1660—ல் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் முதலாம் சார்லசின் மைந்தனும் லூயி மன்னனிடம் பாரிசில் இருந்து வந்தவனுமான சார்லசை அழைத்து இரண்டாம் சார்லஸ் என முடிசூட்டியது.

சார்லசும் இச்சைப்படி வாழ முயன்றாலும் பார்லிமெண்டின் பகையைத் தேடிக் கொண்டால் விளையும் பயங்கரத்தை உணர்ந்தவனாதலின் கூடுமானவரை பார்லிமெண்டுக்கு நல்ல பிள்ளையாகவே நடந்து கொண்டான். அவனுடைய ஆட்சி பலம் பொருந்திய ஆட்சியாக இருக்கவில்லை. அவனுடைய காலத்தில் தான் டச்சுக் கப்பற் படை பிரிட்டிஷ் கப்பற் படைக்கு தேம்ஸ் நதிக்கே வந்து தீ வைக்கும் துணிவைப் பெற்றிருந்தது!

இரண்டாம் சார்லஸ் இறந்த பிறகு அவனுடைய சகோதரன் இரண்டாம் ஜேம்ஸ் பிரிட்டனின் மன்னனான். தந்தைக்கு ஏற்பட்ட கதியை மறந்து தான்தோன்றியாக ஆட்சி செய்ய முற்பட்ட இவன், பார்லிமெண்டின்கோபத்துக்கு ஆளாகி, முடியிழந்து ஓட்டம் பிடித்து பிரஞ்சு மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். பார்லிமெண்டும் பெருந்தன்மையோடு அவனை ஓடிப் போக அனுமதித்தது. மன்னனில்லாத நாட்டில் மீண்டும் ஒரு முறை குடியரசு முறையைப் பரீட்சை செய்ய பார்லிமெண்ட் இஷ்டப்படவில்லை. ஜேம்ஸ் மன்னனுக்கு உறவினனான ஆரஞ்சு வில்லியத்தையும் அவன் மனைவியையும் அழைத்து, இருவரும் கூட்டாக இருந்து பிரிட்டனை ஆள ஏற்பாடு செய்தது!

மாதவி, முடியாட்சியை பிரிட்டிஷ் மக்கள் முழுக்கவும் புறக்கணிக்க இஷ்டப்படாவிட்டாலும், பார்லிமெண்டின் ஒப்புதல் இன்றி மன்னர்கள் ஆள முடியாது என்ற நிலை பிறந்தது. மன்னனின் அதிகாரம் மக்கட் பிரதிநிதிகளின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு இயங்க வேண்டியதாயிற்று. 'வரம்புக்குட்பட்ட முடியரசு' பிரிட்டனில் ஏற்பட்டது. மனித வரலாற்றில் ஒரு புது சகாப்தம் ஆரம்பமாயிற்று. பார்லிமெண்டரி ஜனநாயகம் தோன்றி, உலகுக்கே வழிகாட்டியது. பிரிட்டிஷ் பார்லிமெண்ட் உலகின் பல்வேறு சட்ட மன்றங்களின் தாய் எனப் பெயர் பெற்றது. பழமையைக் கைவிடாமலும் புதுமையைப் புறக்கணிக்காமலும் பிரிட்டிஷ் மக்கள் புதியதோர் அரசியல் நெறியை வகுத்தனர். ஜனநாயகப் பாதையில் உலகம் பீடுநடைபோட ஆரம்பித்த காலம் இதுதான்!

அன்புள்ள,

அகத்தியன்.

ராஜாமணி பிக்சர்ஸ்

நடிகர் எம். ஆர். சந்தானம், மோகன் ஆர்ட்ஸ் கே. மோகன கிருஷ்ணன் ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து துவக்கியுள்ளனர், ராஜாமணி பிக்சர்ஸ்—எனும் படப்பிடிப்பு நிறுவனம் ஒன்றை! இந்த நிறுவனத்தின் முதற் தயாரிப்பிற்கான துவக்க விழா செப்டம்பர் திங்கள் 16–ந் தேதி காலை நெப்டியூன் படப்பிடிப்பு நிலையத்தில் துவங்கியது. பட உலகப் பிரமுகர்கள் பலரும் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர். சிவாஜி கணேசனின் தாயார் திருமதி ராஜாமணி அம்மையார் காமிராவை முடுக்கி வைத்தார். இந்தப் படத்தில் பிரதம பாகத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிக்க இருக்கிறார்.

மாடர்ன் தியேட்டர்சின் தயாரிப்புகள்

மாடர்ன் தியேட்டர்சார் சமூகத் திரைப்படமொன்றை வெகு வேகமாகத் தயாரித்து வருகின்றனர். 'எங்கள் குல தேவி' எனும் பெயர் கொண்ட அப்படத்தில் பாலாஜி, ஜாவர் சீதாராமன், வி. ஆர். ராஜகோபால், கருணாநிதி, பண்டரிபாய், மைனாவதி ஆகியோர் நடிக்கின்றனர். கே. வி. மகாதேவன் இசையமைக்கும் அப்படத்தை ஆதுர்த்தி சுப்பராவ் டைரக்ட் செய்கிறார்.

மேலும் இந்திப் படமாய் வெளிவந்த 'கைதி எண் 911' எனும் கதையைத் தமிழில் தயாரிக்கப்போகின்றனர். அதற்கான படப்பிடிப்பு அண்மையில் துவங்க இருக்கிறது.

இந்தியப் படங்கள் பற்றி...

மேனாட்டினர் நம் துணைக்கண்டத்துப் படங்களை எப்படி விரும்புகின்றனர் — எந்தக் கோணத்தில் பார்க்கின்றனர்—என்பதை ஒரு ஜெர்மானிய நிபுணர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

'பெரும்பாலும் நம் படங்கள் இங்குள்ள வாழ்க்கையையே பிரதிபலிக்கின்றன — பொழுது போக்கு அம்சம் குறைவு—என அவர் குறிப்பிடுகிறார். இத்தனைக்கும் அவர் பார்த்த படங்கள், 'மதர் இந்தியா' 'சுஜாதா' போன்ற வட இந்தியப் படங்கள் —இந்திய அரசினரின் பாராட்டுப் பெற்ற படங்கள்—இருந்தும் இந்தியக் கதைப் படங்களின் தொழில் நுணுக்க அம்சங்கள் சூயஸ் கால்வாயுக்கு அப்பால் எடுபடாது என்று துணிவாகக் கூறியுள்ளார்!

கார்ட்டூனில் 1001-இரவுகள்!

1001 இரவுகள் — எனும் உலகப் புகழ் பெற்ற அரேபியக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு எண்ணற்ற திரைப் படங்கள் உருவெடுத்து ஓடியிருக்கின்றன. அதிசயமும், அழகான கதையமைப்பும் கொண்ட அக்கதைகள் இளைஞர்களுக்குத் தெவிட்டாத உணவாக இனிப்பவை! அத்தகைய கதையை கேலிச்சித்திரப் படமாக (கார்ட்டூன் படமாக) உருவாக்குகின்றனர், மேலை நாட்டில்! பிரபல ஓவியர்கள் ஜாக் யூஸ் ரூப், பாப்ட் ராவ் கோ— ஆகியோர் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

நகைச்சுவைப் படம்

நகைச் சுவைப் படங்களுக்கே முதன்மையுற்று விளங்கப் போகிற அளவில் ஒரு படத்தைத் தயாரிக்க இருக்கின்றனர், கொலம்பியா கம்பெனியார்! நினைத்து நினைத்துச் சிரிக்க வைக்கும் சம்பவங்கள் பின்னிக் கிடக்குமாம், 'கர்ஜிக்கும் சுண்டெலி'— எனும் அப்படத்தில்!

ஒருவர் அமெரிக்க அரசாங்கத்தின் மீது போர் தொடுத்திருப்பதாகக் கூறுகிறார். அது மட்டுமல்ல; தான் ஒரு ஐரோப்பிய இனத்தின் அரசன்! அரசன் மட்டுமல்ல; முதலமைச்சர்! முதலமைச்சர் மட்டுமல்ல; தளபதி!—என்று கூறிக் கொள்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபை முதல் அணுகுண்டுவரை இக்கதையில் இடம் பெற்றுள்ளதாம். தான் கண்டுபிடித்த 'கியூ பாம்ப்'— எனும் குண்டின் ரகசியத்தை அமெரிக்க நாடு திருடிக் கொண்டதாகக் குற்றம் சாட்டுகிறானும். எங்கே? ஐ. நா.—வில்! இப்படி நகைச்சுவை அம்சங்கள் உள்ள அப்படம் விரைவில் வெளிவர இருக்கிறது.

குழந்தைகள் படம்

எம். வி. ஆர். புரொடக்ஷன்ஸ் என்ற பெயரில் ஒரு படக் கம்பெனியைத் துவக்கியுள்ளார், நடிகை எம். வி. ராஜம்மா அவர்கள்! இப்படக் கம்பெனியின் முதல் தயாரிப்பே மூன்று மொழிப் படத்தயாரிப்புத்தான்! தமிழ், தெலுங்கு, கன்னடம்— ஆகிய மூன்று மொழிகளில் தயாராகும் இப்படம், குழந்தைகள் படமாக இருக்குமாம்! பி. ஆர். பந்துலு, எம். வி. ராஜம்மா, மாதவராவ் — ஆகிய மூன்று பெரிய நடிகர்களைத் தவிர மற்ற நடிகர்கள் குழந்தைகளே!

மாட்னிக்குத் தடை...?

திரைப்படக் கொட்டகைகளில் பகல் காட்சிகள் நடத்தப்படுவது பள்ளிகளுக்கு இடைஞ்சல் தருவதாக மத்திய அரசுக்குப் புகார் வந்திருக்கிறதாம்.

பள்ளிப் பிள்ளைகள் தங்களுடைய வகுப்புக்களுக்குச் செல்லாது, பகல் காட்சி காணப்போய் விடுவதாகக் கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் புகார் செய்ததாலேயே மத்திய அரசு, மாநில அரசுகளை மாட்னிக் காட்சிகளைத் தடை செய்யலாமா என்பது பற்றிப் பரிசிலனை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளதாம்!

பிரபுராம் பிலிம்ஸ்

சிவாஜி கணேசனின் தம்பியான திரு. வி. சி. சண்முகம் அவர்களும், முத்துமாணிக்கம் அவர்களும் கூட்டாகச் சேர்ந்து மேற்கண்ட நிறுவனம் ஒன்றை அமைத்திருக்கின்றனர். அதன் துவக்கவிழா சமீபத்தில் வெற்றிகரமாக நடந்தேறியது.

அந்த நிறுவனத்தினர் தயாரிக்கப் போகும் முதற் படத்தில் கதாநாயகனாக நடிகர் திலகம் நடிக்க இருக்கிறார்.

இந்த மாற்றங்கள் வளருமா?
உங்கள் மனம்தான் விரியுமா?

சந்துகளில், பொந்துகளில் வாழப்பிறந்தவை பூச்சிகளும், புழுக்களும்!

அடிமைச்சகதியிலும், வறுமைக் குழிகளிலும் வாழப்பிறந்தவர்கள் இந்த நாட்டு மக்கள்!

முப்புறம் கடலால் சூழப்பட்ட இவர்களுக்கு விடுதலையில்லை; வாழ வகையில்லை!

நேற்று 'வெள்ளைத் தோலனின்' ஆட்சி! எனவே, ஆங்கிலம் இந்த நாட்டை ஆட்டிப்படைத்தது. தமிழின் எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் ஏட்டில் தூங்கிற்று. தாய்மொழி தூர எறியப்பட்டது. துருப்பிடிக்க ஆரம்பித்தது!

அரசாட்சியிலும் ஆங்கிலம்! படக் காட்சியிலும் ஆங்கிலம்! எங்கெங்கு நோக்கினும் ஆங்கிலம்!

புது மொழிதான்—என்றாலும், புது மலர்ச்சி எண்ணம் தந்தது அது—என்றுணர ஆரம்பிக்கும் போது புதுத் திருப்பம் வந்தது. ஆட்சியாளர் மாறினர். பால் ஆவி நிறத்தான் கப்பல் ஏறினான்—காவி நிறத்தான் ஆட்சி வந்தது! ஆம்; வடநாட்டவரின் ஆதிபத்திய மூட்டை தென்னகத்தின் முதுகெலும்பை முறிக்கத் தொடங்கியது!

ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்தவன ஆட்சியோ போயிற்று. நம்மவர் ஆட்சி — நம் 'பாரத புத்திரர்' ஆட்சி நன்மை செய்யாதா— என ஏங்கினான் ஏழை! இதயம்தான் வீங்கியதே தவிர பலனேதும் இல்லை!

பாரத புத்திரராயிற்றே—பழங் கஞ்சியாவது கிடைக்காதா என்று நினைத்தான், தென்னகத்துப் பாட்டாளி! ஆனால் பஞ்சம்தான் அவனைவிட்டுப் பிரியாத கூட்டாளியாயிற்று.

அகில இந்தியா ஆயிற்றே— ஆசாபாசங்களுக்கு இடம் இருக்காது என்று எண்ணினான்! ஆனால் அவன் கண்டதோ வளம் எல்லாம் வடக்கே; தேய்வெல்லாம் தெற்கே என்னும் நிலை.

காந்தியவாதிகளாயிற்றே — குமுறும் ஊர்ச் சச்சரவுகள் அடங்குமென்று நினைத்தான். ஆனால் குமுறலுக்கும், குழப்பத்திற்கும், குள்ள நரி வேலைகளுக்கும் அவர்களே கழனிகள் ஆகின்ற நிலை கண்டான்.

நம்மவராயிற்றே — நம் தாய் மொழிக்கு ஏற்றம் இருக்குமென நினைத்தான்! ஆனால் அவன் கண்ட காட்சி...?

தாய்மொழியின் பேராலே இந்த நாட்டின் பெயரில்லை! தாய் மொழியின் மணிக் கழுத்தை பேயொன்றின் கோரப் பற்கள் சுவைக்கக் கண்டான்! இந்தியெனும் அப்பேய் மொழியின் வேகத்தைத் தடுக்கும் 'ரத்த வேகம்' உள்ளோர், உள்ளூர் ஆட்சியிலே இல்லை!

ஆடும் பதுமைகளின் — தூயவரைச் சாடும் கூலிக்காரர்களின் ஆட்சியே இங்கிருப்பது! இவர்களை ஆட்டும் சூக்குமக் கயிறு ஓராயிரம் மைல்களுக்கு அப்பால், செங்கோட்டையிலே இருப்பதையும் கண்டான்!

எனவே, குப்பைமேட்டிலே தமிழ் மொழி; கொலுமண்டபத்திலே இந்தி மொழி!

சுடுகாட்டுக் கற்களில் தமிழ் மொழி; நாட்டின் சாலைகளில் தூரத்தைக் குறிக்கும் மைல் கற்களில் இந்தி மொழி!

நாணயத்தில்—பணம் அனுப்பும் நமூனாக்களில் கடிதங்களில்—ஊர்திகளில் எங்கும் 'இந்தி' எனும் நச்சுக் காற்று; நாசியைத் துளைக்கும் நாற்றம்!

'இதைத் தட்டிக் கேட்பாரில்லையே, கதர் கட்டி வாழ்வோர் கூடாரத்தில்!' — என ஏங்கும் போது, தென்னகம் விரும்பாத இந்தத் தீய செயலைச் செய்யாது தடுப்போர் இல்லையோ' — என இதயம் நெகிழும்போது ஒரு நம்பிக்கை நட்சத்திரம் தோன்றுவதுபோல் கண்களுக்குத் தெரிகிறது.

"இனி அஞ்சலட்டைகளில் இந்திஇருக்காது. வட்டாரமொழியிருக்கும்!" — என்று அறிவித்தார் போக்குவரத்து அமைச்சர் டாக்டர். பி. சுப்பராயன்!

தமிழகத்தின் கோரிக்கை என்னாலே தள்ளு குப்பையிலே-என்ற வார்த்தைகள் விழும் அதிகார பீடத்திலிருந்துதான் இந்தச் சொற்கள் வந்திருக்கின்றன!

'அஞ்சலட்டைகளில் வட்டார மொழிகள் இருக்குமாம்!'— இது ஏதோ மனமிரங்கி அவர்கள் இடும் பிச்சைப் பொருளாக நமக்குத் தெரிந்தாலும், ஏகாதிபத்திய மொழி ஆதிக்கம் இல்லை இனி!—எனும் போது ஒரு வித மகிழ்ச்சி தோன்றுகிறது.

நூற்றுக்கு எண்பது பேர் படிக்காத நாட்டிலே, எங்கிருந்தோ வந்த இந்தி மொழிக்கு முதலிடம்!

நல்லூரிலிருந்து வேலூருக்கு எழுதும் கடிதத்திலே 'நாவுதிருந்தாதவர்' மொழி.

கந்தனுக்குக் கறுப்பன் எழுதும் கடிதத்திலேயும் அந்த மொழி!

முசிரி வட்டம் ஆமூர் கூட்டுறவு மருத்துவ விடுதி நிதிக்காக

ஆமூர் கலைவாணர் அரங்கில்

27-9-69 ஞாயிறு இரவு 10 மணிக்கு

நடிப்பிசைப் புலவர்

கே. ஆர். ராமசாமி அவர்கள் தலைமையில்

தோழர்கள் அன்பில் தருமலிங்கம், கே. காமாட்சி, எஸ். ஏ. ஜி. ராபி அவர்தம் குழுவினர் நடிக்கும்

'பரப்பிரம்மம்'

(கலைஞர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. எழுதியது)

ஏனிந்த மொழியிங்கு வேண்டும்?

ஏனிங்கு அதற்கு ஆதிக்கம்?— என்றெல்லாம் சிந்தித்து, ரத்தம் சிந்தியாவது இந்த இழிநிலை துடைக்க வேண்டும் — என்ற கொதிப்பு இங்கு எழுந்தது; இந்த அறிவிப்பும் வந்தது!

அதே போன்று பணம் அனுப்பும் நமூனா-விலும் (மணியார்டரிலும்) இந்தி மொழியின் ஆதிக்கம் இருந்தது!

பணம் அனுப்புகிறவர்களின் பெயர் எழுதும் இடத்திலே பணம் பெறுகின்றவரின் பெயரையும், பணம் பெறுகின்றவரின் பெயர் எழுதும் இடத்திலே பணம் அனுப்புகின்றவர் பெயரையும் எழுதித் திண்டாடுவோர் அனேகர். அதனால் விளையும் குழப்பங்களும் எண்ணில! அஞ்சல் நிலையங்களில் வேலை செய்கின்றவர்களிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்றாலோ, அவர்களுக்கும் புரிவதில்லை!

குழப்பத்தின் மத்தியிலே கோலோச்சும் ஆட்சி மட்டுமல்ல, இந்த ஆட்சி! குள்ள மனப்பான்மையும் கொண்ட ஆட்சி!

இந்தி வழங்கும் மண்ணில் தோன்றிய 'மகான்களை' மட்டுமே தபால் தலைகளிலே இதுவரை போட்டு வந்தனர்!

பெயர் தெரியாதவர்கள் 'பாரத நாட்டின்' மூலை முடுக்குகளில் உலா வந்தனர், பட உருவிலே!

அதிலே ஒரு தென்னாட்டவர் இல்லை. ஒரு திராவிடத்து மனிதர் இல்லை! திருவள்ளுவர் படம் இல்லை! அவராவது கதர்க் கொடிக்குத் தியாகம் செய்யாதவர்.

கதர்ப் பாட்டுப்பாடி, காந்தி பாட்டுப் பாடி, பாட்டுக் கொரு புலவனாக விளங்கிய 'தேசியகவி' பாரதியாரின் உருவமாவது உண்டா? இல்லை! இல்லை!

ஏகாதிபத்தியசதைக்கொழுப்பேறிய அவர்கள் கண்களிலே தென்னாட்டுக்காரர் ஒருவர் படம் கூடப் படவில்லை,

ஆனால் இப்போது "தபால் தலைகளில் திருவள்ளுவர், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோருடைய உருவங்கள் வெளியிடுவது பற்றி தீவிரமாக பரிசீலிக்கிறோம்" —என்று அறிவித்திருக்கிறார் டாக்டர் சுப்பராயன்!

அவர் தென்னாட்டுக்காரர்; இந்தியின் ஆதிபத்தியத்தை இதுவரை எதிர்த்து முழங்கியவர். எனவே, 'பழைய மயக்க'த்தில் பேசுகிறாரா; இல்லை — அவரது இதயத்துச் செய்தி இதுதானா?— என ஏக்கம் தெரிவிக்கிறான் திராவிடத்து ஏழை!

தமிழ் நாட்டவருக்காக தமிழ் நாட்டில் பேசிய சம(ய) தர்மப் பேச்சா?— இல்லை—தன்னுடைய உள்ளக் கிடக்கையின் அறிக்கையா?—என எண்ணி மயங்குகிறான் தென்னகத்தான்.

ஆறுதல் தரும் "இந்தச் செய்திகள் நீடிக்குமா? இந்தச் செய்திகளின் எண்ணிக்கை பெருகுமா? —என்று நப்பாசை கொள்கிறான் இந் நாட்டு மகன்!

—அடியார்

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு